# பிரகாசம்

පිරගාසම්

PIRAGASAM

02 OCT 2014

சஞ்சிகை 2

2014



ISSN 2362-0552

விலை ரூ 30/=


SAI
DIGITAL
for all your
graphic design needs.
OSAI Digital
473 1/1A, Galle Road, Wellawatte, Colombo 06
Tel : 077 54 333 56 E mail : osaidigital@gmail.com
Graphic Design
Logo Design
Album Design
Digital Printing
Offset Printing
Flex Printing
Sticker Printing
Type Setting
CD Printing
Mug Printing

# பிரகாசம்

அனைவரதும் உலகம்!
எல்லோர்க்கும் வாழ்க்கை!

සැමගේ ලෝකය!
සියලුදෙනාටම ජීවිතය!

World for everyone !
Life for all !

**நிறுவுனரும் ஆசிரியரும்**
சுமதி. குகதாசன்

**ஆசிரியர் குழுமம்**
S.அருளானந்தன்
நெடுந்தீவு இரா. தர்மலிங்கம்
T.திருவானந்தராஜா

**நிர்வாக உதவி**
T. நித்தியானந்தன்

பிரகாசம் சஞ்சிகையானது
இல 28, 4/2, பசல்ஸ் லேன்,
கொழும்பு - 6
இல் வெளியிடப்படுகிறது

**தொடர்புகளுக்கு:**
தொ.பே.இல: 0770408231



## நன்றிகள்


எமது முதலாவது 'பிரகாசம்' இதழைப் பெற்றுக் கொண்டு எம்மை ஊக்குவிக்கு முகமாக, பணமாக அன்பளிப்புச் செய்த திரு. கு. ஜெயேந்திரன், திரு.எம்.குமாரசாமி அவர்களுக்கு நன்றிகள்.

எமது முயற்சியை மதித்தும், இதற்கான பணச் செலவை கருத்திலெடுத்து எமக்கு உதவு முகமாகவும் இதழைப் பணம் கொடுத்து வாங்கிய அனைவருக்கும் பத்திரிகைக்குழு தனது நன்றி களைத் தெரிவித்துக் கொள்கிறது.

பிரகாசத்தின் அடுத்த வெளியீடு பற்றி தமது ஆவலைத் தெரிவித்துக் கொண்டிருக்கும் அவ்வினிய வாசகர்கள், நமக்கு வழங்கும் உற்சாகத்திற்கு எமது நன்றிகள்.

தமது பத்திரிகையில் இவ்விதழின் வாசகருக்கான அறிமுகத்தினை செய்த 'தினக்குரல்' பத்திரிகைக்கு எமது மிகுந்த நன்றிகள்.

ஆசிரியர்



# மின்னஞ்சலும் வெங்காயமும்

ஒரு கம்பியூட்டர் நிறு வனத் தில் தரை துடைக்கும் வேலைக்கு ஒருவன் விண்ணப்பித் திருந்தான்.

தரை துடைத்துக் காட்டச் சொன்னார்கள். நன்றாகத் துடைத்தான். அடுத்து சின்னதாய் ஒரு இண்டர்வியூ. கடைசியில் அவனிடம் தகவல் சொல்வதற் காக ஈமெயில் முகவரி கேட்டார் கள்.

ஈ மெயிலா? என்ககு ஈ மெயில் இண்டாநெட்டெல்லாம் தெரியாதே! என்றான் துடைக்க வந்தவன். கம்ப்யூட்டர் நிறுவனத் தில் வேலை பார்க்க விரும்பு கிறவனுக்கு ஈமெயில் முகவரி இல்லையா? ச்சே என்று அவனை அனுப்பிவிட்டார்கள்.

வேலை இல்லை என்ற தும் அவனுக்கு என்ன செய்வ தென்று தெரியவில்லை. கையில் 1000 ரூபா இருந்தது. அதைக் கொண்டு மார்க்கெட்டில் வெங் காயம் வாங்கினான். பக்கத்து குடியிருப்புப் பகுதியில் கூவிக் கூவி விற்றான்.லாபம் கிடைத்தது. மீண்டும் வெங்காயம். மீண்டும் விற்பனை. இப்படியே கொஞ்சம் கொஞ்சமாய் விற்று சில வருடங் களில் பெரிய வெங்காய வியாபாரி ஆகிவிட்டான்.

இந்தச் சூழ்நிலையில் ஒரு வங்கிக் கணக்கு திறப்பது சம்பந்தமாக, ஒரு வங்கி ஊழியர் அவனிடம் பேச வந்திருந்தார். வந்தவர் அவனுடைய ஈமெயில் முகவரி கேட்டார்.

வியாபாரி, ஈமெயில் முக வரி இல்லை என்று பதிலளிக்க ஈமெயில் இல்லாமலே இந்தக் காலத்திலை இவ்வளவு முன் னேறி விட்டீர்கள்? உங்களுக்கு மட்டும் ஈமெயில், இண்டர்நெட் டெல்லாம் தெரிந்திருந்தால்? என்று ஆச்சரியமாய்க் கேட்டார் வங்கி ஊழியர்.

அதெல்லாம் தெரிந்திருந் தால் ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத் தில் தரை துடைத்துக் கொண்டி ருப்பேன் என்றார் வியாபாரி.

*நன்றி - திசை*

# எனக்குள்ளே ஒரு எரிமலை புகைக்கிறது

யோ. பெனடிக்ற் பாலன்

நீண்ட காலத்தின் பின் ஏதாவது எழுத வேண்டுமென்று எனக்குள்ளே ஒரு ஆசை சிலிர்க்கிறது. இப்போது நல்ல நேரம். வீட்டில் எல்லோரும் தூங்கிவிட்டார்கள்.

என்ன எழுதுவது? கதை தான். கதை எழுதி என்ன? என்று ஒரு வருஷம் இருந்துவிட்டேன். எழுத மனமில்லை. எழுதியென்ன எழுதாமல் விட்டென்ன எல்லாம் ஒன்று தான். எனக்கு அப்படிப்படு கிறது. எழுதுவதென்ன சாப் பிடுவதிலேயே மனம் விட்டுப் போச்சு. என்னத்தை எப்பிடி எழுதியென்ன சமுதாயத்தில் ஒரு விளைவையும் காணோம். அது ஒரு செக்கு மாடு மாதிரி பழைய வட்டத்தில் சுற்றிச் சுற்றி வரு கிறது. ஆனால் மாடு மேலும் மேலும் மோசமாகிக் கொண்டு வருகிறது.

கதை எழுதி சமுதா யத்தை மாற்ற முடியுமா?

எங்கு பார்த்தாலும், வாழத் துடிக்கின்ற மக்களின் ஏக்கங்களும், பெருமூச்சுக்களும், அழுகைகளும், அவலங்களும் தான் அதிகமாகிக்கொண்டு இருக்கின்றன.

எங்கு யாரைக் கேட்டா லும் ஒரே பிரச்சினைகள். என்ன பிரச்சினைகள்? வேறு என்ன பிரச்சினைகள்? வாழ்க்கைப் பிரச்சினைகள் தான்! எனக்கும் பிரச்சினை; என் வீட்டிலும் பிரச்சினை.

எனக்கு என்ன வேலை? ஊரெல்லாம் அலைந்து திரியும் பொழுது வாழ்க்கையின் பல மட்டங்களில் உள்ள மக்களோடு பழகி, அவர்களின் முகங்களைக் கூர்ந்து கவனித்துப் பார்த்தேன். எழுத்தாளன் இல்லையா?

எல்லோர் முகங்களிலும் சிரிப்பு குறைந்து கொண்டிருக் கிறது.

என் வீட்டில் முந்திய கலகலப்பு இல்லை.

அப்பு இப்ப தூங்கி யிருக்கமாட்டார். அம்மாவுக்கு யோசனையில் நித்திரையே வருவதில்லை. இப்பவும் கண்ணை மூடிக்கொண்டுதான் கிடப்பர். எனக்கு? பல வகையி லும் நன்றாக மனம் விரக்தியுற்று விட்டது. இப்பவும் என்ன அப்படிதான்.

"க்கும் - க்கும் - ப்பு" இந்தா என் அப்பு இருக்கிறார். அம்மா திண்ணையில் கிடக்கு றா. அவர்களுக்கு நானும் ஒரு சுமை? வேறெப்படி நினைக் கிறது? இந்த நிலையில் நானும் கதையா எழுத?

அப்புவும், அம்மாவும் இரவும், பகலும், வெய்யிலிலும், மழையிலும் சதா நிலத்தைக் கிண்டி அதிலே பாடுபட்டு எனக்கு உணவு, உடை, படிப்பு தேவையானது எல்லாம் சகலதும் தந்து வளர்த்து விட்டுள்ளார்கள். நான் இன்னும் அவர்களுடைய சோற்றைத் தின்கிறேன். அப்புவும் அம்மாவும் இன்றைக்கும் தோட்டத்துக்கு போய்விட்டுத் தான் வந்து கிடக்குதுகள்.

அவர்கள் உழைப் பாளிகள்!

நான்! பெரிய படிப்பாளி, பட்டதாரி! சும்மாவா?

ஐந்து வயது தொடங்கி பாடசாலை சென்று இருபத் தைந்து வயது வரை படித் தேன்! படிப்பா? சித்திரவதை. அது இப்ப தான் தெரிகிறது. அப்போ? ஒரே படிப்பு, ஓயாத படிப்பு. காலையில் நாலு மணிக்கு அப்பு எழுப்பி விடுவார். பிறகு இரவு பத்து மணி, பன்னிரெண்டு மணி வரை படிப்பு. தம்பி "நீ நன்றாகப் படித்தால் தான் பெரியாளாக வரலாம்" என்று அடிக்கடி அப்பு சொல்லுவார். "தான் பெரிய ஆளாக வர வேண்டும், 'லோங்ஸ்' போட்டுக் கொண்டு, சொந்தக்கார் வாங்கி ஓடவேண்டும்'' என்று எண்ணி அப்புவின் சொல்லை நம்பிப் படித்தேன்.

இந்தக் குடிசையில், இந்த இடத்திலிருந்து தான் படித்தேன். இதைப் பெரிய கல் வீடாகக் கட்டவேண்டும் என்றும் நினைத்தேன். இன்று இக் குடிசையின் கூரை மேயவே அப்புவிடம் பணமில்லை. என்னி டம்... நினைக்கவே வெட்கமாக இருக்கிறது.

எத்தனை போட்டிப் பரீட் சைகள்! அப்பப்பா...! அரிவரி வகுப்பிலிருந்து போட்டி தானே. அநேகரை முட்டாள்களாகத் தள்ளிவிடும் பரீட்சைகளில் எல்லாம் நான் தப்பி தமிழ்ப் பல்கலைக்கழக புதுமுகப் பரீட்சை யில் சித்தியடைந்தேன்!

அன்று எனக்கிருந்த தலைக்கனம்! இனி என்னைப் பிடிக்கேலாது: அப்படி ஒரு பெருமை!

"தம்பி இனி ஒரு 'பெரிய ஆள்' தான்" கோப்பாயில் என் ஊரில் - எல்லோரும் கூறினார்கள்.

அப்புவுக்கும் அம்மாவுக்கும் ஊரில் நல்ல மதிப்பு ஏறிவிட்டது. அன்று வீட்டில் பட்டாசு வெடித்து பெருகிய கொண்டாட்டம்!

"சிவசம்புவுக்கு இனி என்ன? மூத்தவன் பெரிய படிப்பு படிக்கப்போறான்" என்று அப்புவைக் கண்டவர்கள் எல்லோரும் கூறினார்கள். அப்பு வீட்டில் வந்துக் கூறிப் பெருமைப்பட்டார்.

தம்பி! படிச்சுமுடிச்சு வந்து வேலைக்குப் போனால் சகோதரங்களையெல்லாம் நல்ல நிலைக்குக் கொண்டு வந்துவிடுவான். எனக்கினி கவலை இல்லை என்று அம்மாவுக்குக் கூறினர். அம்மா சிரித்தா.

வீட்டில் எல்லோரும் என்னைப் பெருமையோடு சர்வகலாசாலைக்கு என்னை அனுப்பி விட்டார்கள். நான் பேரதெனியாவுக்கு குதூகலத்தோடு போனேன். அப்பு சொல்லிவிட்டார்:

"தம்பி! நீ படிக்கப் பேறாய்: உனக்கு இருக்கிற பொறுப்பு உனக்குத்தெரியும். கெட்ட கூட்டாளித்தனம் கூடாது. யோசிச்சு நடந்துகொள்."

நான் சர்வகலாசாலையில் அப்படியே நடந்தேன். படிப்பில் மட்டும்தான் கவனமாக இருந்தேன். என்னோடு வந்தவர்கள் எல்லோரும் என்னென்னவோ எல்லாம் செய்தார்கள். எனக்கு அப்புவின் பயம். சிவசத்தியமா நான் எதிலும் பங்குபற்றவில்லை. என்னை அங்கு எல்லா மாணவர்களும் "பேயன்" என்றார்கள். நான் கவலைப்படவில்லை.

குறுக்காலை போகக் கூடாது, ஒரு பெரிய ஆளாக வரவேண்டும் என்பது தான் என் நோக்கம்.

அங்கு மாணவர்கள் அரசியல் இயக்கங்களில் ஈடுபட்டார்கள். ஒவ்வொரு கட்சியைச் சொல்லிக்கொண்டு திரிந்தார்கள். அரசாங்க எதிர்ப்பு, ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் கொடி பிடித்துக்கொண்டு பங்குபற்றினார்கள். "எதிர்காலம் இளைஞர்களுடையது" என்று எத்தனையோ கோஷம் போட்டார்கள்.

நான் என் ஞூமிலேயே இருந்துகொண்டேன். அவர்கள் எல்லோரும் நாசமாய்ப் போவதாக எனக்குப்பட்டது. என் நண்பர் களான சிலருக்கு "இதெல்லாம் விழல் வேலை" என்று புத்தி மதியும் கூறினேன்.

இது ஒரு கூட்டம். இன்னு மொரு கூட்டம் பெண்களோடு கூடிப் பேசி, காதல் கொண்டு மிக ஜாலியாக அந்த மூன்று வருடங் களையும் கழித்தார்கள். அப்படிச் செய்ய எனக்கும் கொள்ளை ஆசை. நான் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

பெண்கள் மத்தியில் நான் ஒரு நல்ல பிள்ளை. நானும் தன்பாடும். அந்த மூன்று வருட காலத்தில் எனக்கு வீட்டில் நடக்காத நடப்பெல்லாம் நடந்தது.

எனக்கு மட்டுமில்லை, யாழ்பாணத்தில் படிக்கிற எல் லோருக்கும் அப்படித்தான். தகப்பனும், தாயும் தங்கள் உழைப்பு, பணம், நம்பிக்கை எல்லாவற்றையும் பிள்ளைகளின் படிப்பில் தான் முதலீடு செய்து, அதிலிருந்து வருமானம் பெற வல்லவா காத்திருக்கிறார்கள்.

ஊரில் எனக்குத் தனி மதிப்பு! பல்கலைக்கழகத்தில் அல்லவா படிக்கிறேன்!

நான் பீ.ஏ. பாஸ் பண்ணி விட்டேன் என்று 'ரிசல்ட்' வந்ததும் நான் கொண்ட மகிழ்ச்சி! என் அப்பு அடைந்த சந்தோஷம்! என் அம்மா கொண்ட பெருமை! என் தங்கச்சிமார், தம்பிமாரின் பூரிப்பு!

ஒரே கொண்டாட்டம் வீட் டில்: பட்டாசு வெடி வெடியென்று வெடித்துத் தள்ளியது.

எல்லாம் அப்புவின் வேலை தான்.

அன்று அப்பு வீட்டில் எல்லோரையும், ஊரிலுள்ள பிள்ளையார் கோவிலுக்குக் கூட்டிக் கொண்டு போய் கும் பிட்டார். எனக்கொரு வேலை, நல்லவேலை, பெரிய சம்பளத் துடன் கிடைக்கவேணும் என்று நானும் கையெடுத்துக் கும் பிட்டேன். அப்பு, அம்மா, தங்கச்சி மார், தம்பிமார் எல்லோரும் அன்று எனக்காக கும்பிட்டார்கள்.

அன்று நான் பட்டதாரி என்ற பெருமையோடு நிமிர்ந்து நடந்தேன். எனக்கு பெரிய ஒரு

வேலை கிடைக்கும், என் படிப்புக்குத் தகுந்த வேலை கிடைக்காமலா போய்விடும்?

எனது வாழ்க்கையில் பாதிக்காலம் ஐம்பது வயதுக்கு மேல் வாழ்வது நிச்சயமா? நான் பாதிக்குக் கூடிய காலம் என்பேன்: படிப்பில் செலவழிக்க வைத்த அரசாங்கம் வேலை தராமலா போய்விடும்?

வேலை கிடைக்கும்! வேலை கிடைக்கும்!

கிடைத்ததும்-?

" க்கும்-க்கும்-ப்பு... தம்பி" அப்பு இருமுகிறார்.

"ஓய் என்னப்பு?"

"சாப்பிட்டியா"

"ஓம்"

அப்பு இப்பத்தான் சாப்பிடப்போகிறார். என்னிலை அவ்வளவு அக்கறை!

வேலை கிடைத்ததும் முதலில் அப்பு என் படிப்புக்காக ஈடுவைத்த காணியை மீள வேணும். இரண்டு, மூன்று வருஷத்தில் மீளாவிட்டால் எம் சோறும் போச்சு. தங்கச்சிக்கு சீதனமும் இல்லை.

அம்மாவின் விற்ற நகைகள், ஈடுவைத்திருக்கிற நகைகளையெல்லாம் வாங்கிக் கொடுக்கவேணும். மூத்த தங்கச்சி நிர்மலாவுக்கு சீதனம் கொடுத்து நல்ல இடத்தில் கலியாணம் செய்துவைக்க வேணும் இவற்றையெல்லாம் செய்து என் அப்புவையும் மனம் குளிரச் சிரிக்க வைக்க வேண்டும் என்றெல்லாம் எண்ணியிருந்தேன். பட்டதாரியாகி ஏழு வருஷங்கள் ஆகிவிட்டன. ஒரு மண்ணாங்கட்டியும் நடக்கவில்லை. என் தலைமயிர் எல்லாம் கொட்டுண்டு போச்சு.

எல்லாக் கடமைகளையும் செய்து முடித்துவிட்டு நானும் திருமணம் செய்ய வேண்டுமென எண்ணியிருந்தேன். முந்தி மாப்பிள்ளை கேட்டு பலர் ஓடி வந்தார்கள். இப்ப ஒருவரும் வருவதாகத் தெரியவில்லை.

இதற்குள்ளே எனக்கொரு காதலி! எனக்கே சிரிப்பு. எனக்கு வேலை கிடைக்கும் மட்டும் காத்துக் கொண்டிருப்பாளா? இது என்ன சிலப்பதிகாரக் காலமா?

நான் காதல் கீதல் ஒன்றும் வேண்டாம் என்று தான் இருந்தேன். நான் சர்வகலாசாலையிலிருந்து வந்தபின் அவளாகவே காதலித்தாள்.

ச்சீ... அவளைப்பற்றி யோசிச்சு என்ன பயன்? போகட்டும்.

என் காதல் தோல்வியை ஒரு கதையாக எழுதுவமா? இதுவும் ஒரு கதையா? இப்படி எத்தனை கதைகள்! இதை எழுத எழுத்தாளர் ஏராளம்.

அவள் ஒரு ஒப்பீசரை திருமணம் செய்து நன்றாக வாழ்கிறாள். வாழட்டும். நான் இருக்கிறேன்! வயது தான் போய்விட்டது: பரவாயில்லை: யாருக்குத்தான் வயது நிற்குது?

முப்பத்திரண்டு வயது தாண்டிவிட்டதே! பிறகென்ன?

ஓ! தலைமயிரும் நரைக்கத் தொடங்கிவிட்டது. இப்ப சின்ன வயதிலும் நரைக்கிறது தானே?

எனக்கு வயது போய்த் தானே நரைக்குது? இதில் இப்ப என்ன? இது ஒரு கவலையா? மனிதனுக்கு எத்தனை கவலை கள்?

என் வாழ்வில் வசந்த காலம் முழுவதையும் முப்பது வருடங்களுக்கு மேல் படிப்பிலும் வேலை கிடைக்கும் கிடைக்கும் என்ற ஏமாற்றத்திலும் ஏங்கி ஏங்கிக் கழித்துவிட்டேன்.

என்னை நம்பினவர்கள் எல்லாம், என்னை விரக்தியோடும், நம்பிக்கையீனத்தோடும், அனு தாபத்தோடும் பார்க்க இன்னும் நடுத்தெருவில் நிற்கின்றேனே!

நானா நிற்கிறேன்? அர சாங்கம் நிற்கச் சொல்கின்றதா? இந்த ஏழு வருடங்களில் நான் போகாத இண்டர்வியூக்கள் இல்லை. எடுக்காத அரசாங்கப் பரீட்சைகள் இல்லை.

நான் ஒன்றிலும் எடுபட வில்லை. நான் என்ன மக்குவா?

கொழும்புக்கு அடிக்கடி போக, கடிதங்கள் றெஜிஸ்ட்டர் பண்ண அப்பு பணம் தந்து தந்து சலிச்சுப்போனார். "உனக்கு வேலை கிடைக்கிறதுக்குள்ளை நீ எங்களைப் பட்டமரமாக்கி விடு வாய் போலிருக்கு." என்று அம்மா சொன்னா. சொல்லுவா தானே.

என்னோடு படித்த எத் தனையோ பேர் பெரிய பெரி வேலைகளில் இருக்கிறார்கள். ஓ! அவர்கள் பெரிய புள்ளிகளின் பிள்ளைகள்! எனக்கு சிபாரிசு

செய்ய யாரும் இல்லை. என் அப்புவைத் தவிர. எங்கள் எம்.பி. என் அப்புவுக்கு "சிவசம்பு! நீங்கள் பயப்படவேண்டாம். மகனுக்கு நான் வேலை எடுத்துக் கொடுப் பேன் எனக் கூறினார். இது வோட்டுக் கேட்க வரும்போது. இப்போ அவரை சந்திக்க முடியவில்லை அப்பாவும் அலை கிறார்.

இப்போ என்னைக் குற்றம் சொல்லத் தொடங்கிவிட்டார்கள். எப்படி" 'ஆட்ஸ்' படித்ததால் வேலையில்லையாம்.

அரசாங்கம் தந்த படிப் பைத்தான் படித்தேன். இருபத் தைந்து வருஷத்தை வீணே செலவழிக்க எனக்கென்ன மூளைக் கோளாறா?

'ஆட்ஸ்' படித்தால் வேலை இல்லையென்று இப்பவா, எனக்கு முப்பத்திரண்டு வயது கடந்த பிறகா கூறவேண்டும்?

இப்போ 'சயன்ஸ்' படித்தாலும் வேலையில்லை: 'இன்ஜினியரிங்' படித்தாலும் வேலை இல்லை என்கிறார்கள்.

இதற்கென்ன காரணம்? படிக்கிற படிப்பா? திட்டமிட்ட முதலாளித்துவ சமூக பொரு ளாதார அமைப்பா? இவர்கள் யாரை ஏமாற்றப் பார்க்கிறார்கள்

இப்பத்தான் எனக்கு எல்லாம் வெளிக்கிறது!

சர்வகலாசாலையில் எனது றூம் மேட்டாக சண்முகம் இருந்தான். அவன் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு இருந்தான். அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப் பாட்ட ஊர்வலங்களிலும் முன் னனியில் நிற்பான். அவன் ஒரு மலைநாட்டுத்தொழிலாளியின் மகன். அவன் சர்வகலாசாலை யில் படித்துமுடித்து வெளியேறி யது பெரும் அதிசயம். அவன் பணத்துக்காக படாத கஷ்ட மெல்லாம் பட்டான். மூன்று வருஷங்களிலும் இரண்டே இரண்டு 'லோங்ஸ்' தான் வைத்திருந்தான். அவன் சொன்னான்.

"நாதன்! நீ ஒரு விவசாயி யின் மகன். அதுவும் யாழ்பாணத் திலே ஒரு துண்டு நிலத்தை வைத்து, அதிலே மாடாகப்பாடு படுகின்ற ஏழை விவசாயியின் மகன் நீ. இந்த சமுதாயத்தை நம்பிக்கையோடு எதிர்பாராதே! இது முதலாளித்துவ சமுதாய அமைப்பு. இந்த அமைப்பில்

சொத்துள்ளவர்களுக்கு. தான் எல்லாம். ஏன் ஆட்சி அதிகாரமே அவர்களது கையில் தான். தேயிலைத் தோட்டங்களைப்பார். அங்கு மாடாக உழைக்கின்ற பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்களின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள் யார்? தோட்ட முதலாளிகளே! அங்கு உழைக் கின்ற தொழிலாளி வர்க்கத்திற்கு கிடைப்பது அழுகையும், துன்ப மும், நெருக்கடியும், பசியும், பட்டினியும்: ஆனால் அவர்களைச் சுரண்டுகின்ற முதலாளிகளுக்கு கிடைப்பதோ, சகல சுகபோகங் களும், வசதிகளும். இந்த நாட்டில் உள்ள எண்பது வீத மான மக்களிடம் ஒருதுண்டு நிலமும் இல்லை என்று நீ படித்திருக்கின்றாய். இவர்கள் எங்கே உழைக்கின்றார்கள்? நில மெல்லாவற்றையும் சொந்த மாக்கிக்கொண்ட நிலவுடமை யாளர்களிடந்தானே! நிலவுடமை யாளர்கள் அவர்களின் உழைப் பைச் சுரண்டுகிறார்கள். இந்த நாட்டைக் கொள்ளையடித்த பிரித் தானிய ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்ட கல்விமுறை தானே இன்னும் இங்கே இருக்கிறது? அது சொத்துள்ள வர்க்கத்துக்கு மிகச் சாதகமானது. வேலையில்லாத்திண்டாட்டம் இந்த அமைப்பின் பிரிக்கமுடியாத நோய். இந்த நோய்க்கு ஆளாகி அவதியுறுவது இந்த நாட்டின் தொழிலாளி வர்க்கத்தினரும், விவசாயிகளும் அவர்களின் பிள்ளைகளும் தான். எந்த முதலாளியின் பிள்ளை? எந்த நிலவுடமையாளரின் பிள்ளை? எந்தப்பெரும் வியாபாரியின் பிள்ளை? வேலையில்லாமல் கஷ்டப்படுகின்றான். ஒரு உதாரணம் கூற முடியுமா? ஆனால் தொழிலாளியின் பிள்ளை, விவசாயியின் பிள்ளை வேலை இல்லாமல் அலை வதற்கு இலட்சக்கணக்கில் கூறலாம். ஏன் இன்னும், ஒரு வருடத்தில் நீயும் நானும்... இந்த ஓரவஞ்சகமான முதலாளித்துவ சமூக அமைப்பில். தொழிலாளி, விவசாயி மக்களுக்கு என்றும் பிரச்சினை தான்: நெருக்கடி தான்.”

சண்முகம் எனக்கு இப்போ முன்னால் இருப்பது போல் இருக்கிறது. அவனும் வேலை இல்லாமல் இருக்கிறான்.

ஆம்! அவன் சொன்னதில் உண்மை இருக்கிறது. இலங்கை யில் இப்போது உள்ளது, முத லாளித்துவ சமூக அமைப்புத் தான். இதன் பிரதான அம்சம் சுரண்டல் தான்.

முதலாளிகளும் நிலவுடமையாளர்களும் மட்டும் சுரண்டவில்லை. தொழிலாளியும், விவசாயியும் தங்களுக்குக் கிடைத்த கூலியைக்கொண்டு கடைக்கு போனால், வியாபாரிகள் இலாபம் அடிக்கிறார்கள். நிலவுடமையாளர்கள் குத்தகை பறிக்கிறார்கள். அலுவலகங்களில் ஏதாவது வேலை செய்யப் போனால் உத்தியோகத்துக்கு 'சந்தோஷம்' கொடுக்க வேண்டும். பிள்ளைக்கு உத்தியோகம் கேட்டால் அரசியல்வாதி ஆயிரக்கணக்கில் லஞ்சம் கேட்கிறான். பிள்ளையைப் பாடசாலையில் சேர்க்கப் போனால் அங்கும் பணம் தேவை. இப்படி எங்கெங்கெல்லாம் பணம் பறிக்கப்படுகிறது?

இவையெல்லாம் என்ன சுரண்டல் தானே? இந்த முதலாளித்துவ சமூக அமைப்பின் தன்மை தானே? இல்லையா?

எனக்கு மலக்கியாசை நினைக்க மனவருத்தமாக இருக்கிறது. அவன் சுன்னாகத்திலிருக்கிறான். படு ஏழை. ஆரோ ஒரு பெரிய அதிகாரத்தில் இருந்த அரசியல்வாதி ஆசிரியர் வேலை தருவதாக மூவாயிரம் வாங்கினானாம். அவன் நம்பிக் கடன் பட்டுக் கொடுத்தான். இப்போ பணமுமில்லை: வேலையும் இல்லை. கடன்காரர்களுக்கு ஒளித்துத் திரிகின்றான்.

என் அப்புவை எத்தனை பேர் ஏமாற்றினார்கள். ஏன் நானே வாழைக்குலையும், மாம்பழமும் கொண்டுபோய்க் கொடுத்திருக்கிறேன். எல்லோரும் ஏமாற்றிப் போட்டார்கள் கள்ள வேசைமக்கள்!

அப்பு என்ன செய்வார்? அது கிடந்து இருமுது. இருமல் தானே வரும். ஓயாத உழைப்பு. தன் பிள்ளைகளையெல்லாம் நல்ல நிலையில் வைத்துவிட்டு கண்மூடிவிட வேணும் என்ற எண்ணம். அறுபது வயது தாண்டியும் அதில் கொஞ்சமும் நிறைவேறவில்லை. இப்போது அதுக்கு நித்திரையும் இல்லை. ஓயாமல் உழைத்தென்ன?

எனக்கு நிச்சயமாகத் தெரியும். நிம்மதியின்றித்தான் சாவார்!

மூத்த மகனுக்கு - நான் தான் - தன் சொத்து, உழைப்பு, சுகம் அத்தனையும் - ஒரு நல்ல வேட்டி உடுத்தியிருக்கமாட்டார் - எல்லாம் செலவழித்தும் உருப்படியாகாத நிலை.

சிவசம்புவின் மகன் பட்ட தாரி, என்ற ஒரு திருப்தி. இதில் என்ன திருப்தி? மண்ணாங்கட்டி! பட்டதாரியாம். இது யாருடைய பிழை? படிப்பித்த அப்புவின் பிழையா? படித்த என் பிழையா? நாம் இருவரும் என்ன பிழை செய்தோம்?

அப்பு என்னை எவ்வளவு பக்குவமாகப் படிப்பித்தார். படிக் கிற காலத்தில் சின்ன வயதில் இருந்து எங்கும் வெளியில் போகவிடமாட்டார். யாருடனும் கூடவும் விடமாட்டார். மாலை ஆறுமணிக்கு வீட்டில் நிற்க வேணும். ஆறு மணிக்குப் பிந்திப் போனால் அப்புவுடன் அம்மாவும் சேர்ந்து நின்று கொண்டு, இரண்டுபேருமா அடிப்பார்கள்: குத்துவார்கள்.

விளையாடவும் விடமாட் டார்கள்: படி படி என்று நிற்பார்கள். தப்பித்தவறி அரசியல் கூட்டங்கள் எதற்கும் போனால் போச்சு! அன்று முழுக்க அப்பு புறுபுறுப்பார்: குறுக்காலை போகாதே என்று எச்சரிப்பார். இப்ப அரசாங்கம் என்ன சொல் லுது? மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாதென்று தானே? அப்பு அப்படித்தான் சரியா என்னை வளர்த்தார்.

நான் ஒழுங்காக வளர்ந்து ஒழுங்காகப் படித்தேன். எனக்கு என்ன கிடைத்தது? என் தம்பி ஜீ.சி.ஈ பாஸ் பண்ணி பல வருடங்கள் ஆகின்றன. அவனுக்கு என்ன கிடைத்தது?

இப்ப அவன் ஒருவருக் கும் அடங்காமல் றோட்டளக் கிறான். இந்தா இன்னும் வீட்டுக்கு வரவில்லை. இரவு பதினொரு மணி ஆகிறது. அப்புவை எப்படி குற்றம் சொல்வது? இப்ப எப்போதும் தலை குனிந்து நடக்குது. யோசனை அதிகம். துன்பம் அதிகம். அம்மாவுக்கு அதிலும் பார்க்க. தன் பிரச்சினை கள் தன் பிள்ளைகளுக்கும் வரக்கூடாது என்பது அப்பன் நினைப்பு! நல்ல அப்பன் நல்ல அம்மா.

இரண்டுபேரும் குடும்பப் பிரச்சினைகளை தீர்க்கப்படாத பாடுபடுகினம். அவர்கள் தலை எடுக்க வழியில்லை. தீராத பிரச்சினைகள் பெரிதாக வருகின் றன. அதிகரித்துக்கொண்டிருக் கின்றன. இப்ப வீட்டுக்கு சோறு போடுவதே பெரிய பிரச்சினை.

விலைவாசி மேலே, மேலே ஏறிப்போகுது. அரசாங்கத் துக்கு கட்சிகள் மாறி மாறி

வருகின்றன. விலைவாசி மட்டுமா சகல பிரச்சினைகளும் ஏறி ஏறிப் போகின்றன.

கட்சிகள் மாறி என்ன? ஆட்கள் மாறி என்ன?

சமூக அமைப்பு மாற வில்லை, மாற்றப்படவில்லை.

நான் நினைப்பது பிழையா? எனக்குப் பிழையாகத் தெரியவில்லை. வீட்டில் சாப்பாடு இப்ப அப்படியும், இப்படியும் தான். முன்பிருந்ததையும் விட நான் மெலிந்துவிட்டேன். குடும்பத்தில் எல்லாரும் தான். என் மூத்த தங்கச்சியின் பெரு மூச்சு கேட்குது. அவளுக்கு இன்னும் நித்திரை வரவில் லையோ?

அது ஒரு நல்ல பிறவி. அவளுக்கு இருபத்தெட்டு வயசாகின்றது. வாழ்க்கையில் எந்தச் சுகத்தையும் அறியாள். நல்ல சேலை உடுத்து அறியாள். நல்லாகப் படித்தாள். அண்ணன் படிக்கட்டும் என்று அவளை அப்பு ஒன்பதாம் வகுப்போடு நிற்பாட்டி விட்டார். அண்ணன் படித்து முடிக்கட்டும்: நல்ல சேலை உடுத்தலாம் என்றாள். நானும் தங்கச்சிக்கு விதம் விதமான சேலைகள் வாங்கித் தருவேன் என்று புழுகித் தள்ளினேன்.

ஐந்து சதம், பத்து சதமாக சேர்த்து வைத்திருந்து இப்ப எனக்கு முடிவெட்ட அவள் தான் காசு தருவாள். நினைக்க எவ்வளவு வேதனையாக இருக் கிறது!

போன மாதம் அவளு டைய தோட்டை அடைவு வைத் துத்தான் கொழும்புக்கு இன்டர் வியூ ஒன்றுக்குப் போய் வந்தேன்.

அவளுக்குத் திருமணம் செய்து வைக்கவேணும் என்ற ஆசை தான் நடக்குமா?

அவள் எவ்வளவு அழ காக இருந்தாள். இப்பொழுது? அவளுடைய உடம்பில், முகத்திலிருந்த தளதளப்பு எல்லாம் கொட்டுண்டு கண் பள்ளம் விழுந்து, மெலிந்து பல்லும் மிதந்துவிட்டது. சும்மா கிடக்கிறாளே என்று இயற்கை அவளைத் தின்று விட்டதோ?

மற்றவர்களும் பெரிசாகி இரண்டு வருடங்கள் ஆகிது: சின்னவளும் பெரிசாகப் போகிறாள்.

அப்புவுக்குப்பிறகு எல் லாம் என் பொறுப்புக்கள் தான். மூத்தவளுக்குத் திருமணம் செய்வதென்றாலே...

வீடு வளவு வேணும்: மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொடுக்க நன்கொடைப் பணம் குறைந்தது ஐயாயிரம் வேணும். இவ்வளவும் இருந்தால் தான் திருமணம் பேசுவதை யோசிக் கலாம். இவவளவும் இல்லையே! அதனாலே தான் தங்கச்சி இருபத்தெட்டு வயது குமரி!

இவை மட்டும் போதுமா? சாதி பார்க்கவேணும். சாதகப் பொருத்தம் பார்க்கவேணும், குடும்பப் பரம்பரை, கௌரவம், மாப்பிள்ளை பீடி சிகரெட் புகைப்பவரா:

ஐயோ! இது அசிங்க மான சமுதாயம்!

என் பெரியப்பாவின் மகள் முப்பது வயது மட்டும் இருந் தாள். கலியாணம் நடக்கவில்லை. கடைசியில் வளவில் கள்ளுச் சீவ வருகிற நளவனோடு ஓடிவிட் டாள். எங்கே? வாழ்வதற்கு.

அடுத்தகிழமை அவனை அடித்து சந்தி ஆலமரத்திலே தூக்கிவிட்டு, ஓடினவளை வீட்டில் கூட்டிக்கொண்டு வந்து வைத் திருக்கிறார்கள்.

இவையெல்லாம் யாழ்ப் பாண தமிழர் மரபுகள்!

எங்கள் வீட்டில் மட்டு மில்லை: ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு மூன்று குமர்கள் பெருமூச்சு விட்டபடி தான் இருக்கும். முப்பது, முப்பத் தைந்து, நாற்பது வயதுகளில் குமர்கள் இவர்கள் குமர்கள் இல்லையா?

ஏன் இந்த நிலைமை?

யாழ்பாணத்தில் ஆண்கள் இல்லையா?

ஓ...! தாராளம் பேர். இதே வயதுகளில் பொறுப்புக்கள் என்று அழுதுகொண்டு பிரமச்சாரிகளாக இருக்கின்றார்கள்! இவர்களை வாழவிடாமல் கன்னியாஸ்திரி வாழ்க்கையும், சுவாமி வாழ்க்கை யும் வாழும்படி நிர்பந்திப்பது என்ன?

இந்தச் சமுதயத் தடைச் சுவர்களே! அவர்கள் இந்தச் சுவர் களுக்குள்ளே சிறையாகக் கிடக் கிறார்கள். இந்தச் தடைச்சுவர் கள் மிகப் பலமானவை! இவை சொத்துடைமை நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் அத்திவாரம் கொண்டுள்ளன. மனித உணர்வு கள், வாழ்கைத் துடிப்புகள், இன்பங்கள் என்பவற்றை விட நிலத்துக்கும், சொத்துக்கும்

முதன்மையும் முக்கியத்துவமும் கொடுக்கிற நிலப்பிரபுத்துவ , முதலாளித்துவ சமூக அமைப்பு இந் நாட்டில் இருக்கும் வரை இப்படியான அலங்கோலங்கள் தான் தொடரும். பெண்கள் தனிமையில் பெருமூச்சு விட்டுக் கொண்டு தான் இருப்பார்கள்!

சண்முகம் நீ சொன்னவை சரியடா!

இப்போது யாழ்ப்பாணத் தில் தாசிகள் கூட்டம் அதிகமாம். அதிகரிக்காமல் என்ன செய்யும்? பெண்கள் எவ்வளவு காலத்துக் குக் கட்டுப் பாடுகளுக்கு மதிப்பு கொடுத்துக் கொண்டு, உணர்வு களாலும் வயிற்றுப் பசியினாலும் துன்பப்பட்டுக் கொண்டு இருப்பார் கள்.

இந்தச்சமுதாய அமைப்பு, தாசிகளை மட்டுமல்ல, கள்ளர் களை, ஏமாற்றுக்காறர்களே, பொய்யர்களை, தறுதலைகளை, காட்டுவாடிகளை, கொலையாளி களைத்தானே உற்பத்தி செய்து கொண்டு இருக்கிறது.

இது மக்களுக்கு எது விதத்திலும் பொருத்தமில்லாத அமைப்பு தானே!

பொருத்தமானதா? இந்த அமைப்பு இன்னும் இருக்க வேண்டுமா?

நான் என்றால் இந்த அநீதியான, அசிங்கமான சமூக அமைப்பு அழிக்கப்பட வேண்டும் என்று தான் சொல்வேன்!

இதை என் அம்மாவிடம் சொன்னால் கேட்பாவா?

அதுக்கென்ன விளங்கப் போகுது. அதுக்கு தன் பிள்ளை கள் நல்லாக வாழ வேணும், இதைவிட வேறு நினைக்கத் தெரியாது.

எனக்கு வேலை கிடைக்க வேணும்: தங்கச்சிக்கு திருமணம் நடக்கவேண்டும் என்று அது கும்பிடாத கோயில்கள் இல்லை. கொழுத்தாத கற்பூரங் களும் இல்லை. கும்பிடும்போது கண்கள் கண்ணீரைச் சொரிந்து கொண்டிருக்கும்.

எனக்கென்றால் கடவுள் நம்பிக்கை அற்றுப் போச்சு. என்னைப் பொறுத்தவரையில் கடவுள் இல்லை. நான் ஆழமாக யோசிக்கிறேன். எனக்குத் தெரியும்: பரம்பரை பரம்பரையாக

ஏழையாக இருப்பவர்கள் மேலும் மேலும் மோசமான ஏழைகளாகப் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஏழைகளின் புதிய பரம்பரை, வாழ்வின் அதள பாதாளத்துக்கு சென்று கொண்டிருக்கிறது. அதேபோது முன்னைய பரம் பரைகளில் சொத்துப்பத்தோடு சுகமாக வாழ்ந்தவர்களின் புதிய பரம்பரை, மேலும் மேலும் சொத்துகளைப் பெருக்கி சுக போகத்தில் வாழ்கிறார்கள்.

மக்களில் ஒரு பெரும் பகுதியினரை பரம்பரை பரம் பயைாக ஏழைகளாக்கி துன்பத் தையும், அழுகையையும், கஷ்டங்களையும் அனுபவிக்க விடுவதும், ஒரு சில கூட்டத் தினரை பரம்பரை பரம்பரையாக இன்பத்துக்கும், சுகபோகத்திற்கும் உரிமையாளராக்குவதும் கடவு ளின் வேலையா?

இருக்கிற கடவுளை நான் இல்லை என்று கூறவில்லை.

நம்பச்சொல்லுகிற கடவுளைத் தான் என்னால் நம்பமுடியவில்லை. கடவுளை நம்பச் சொல்ல இவர்கள் யார்?

அளவு கடந்த இரக்கமும் எல்லையற்ற அன்புமுள்ள கடவுளிடம் ஏழையின் மகனாகிய நான் நீதியை தேடுகின்றேன். நான் அறிந்தவகையில் இந்த சமுதாயத்தில் நீதியைக் காணோம். கடவுள் ஏழைகளை நேசிக்கிறார்: ஆனால் பணக் காரருக்கு உதவி செய்கிறார்: என்று ஒரு யூதப் பழமொழி எங்கோ படித்த ஞாபகம். இது உண்மையாக இருக்குமோ?

சொத்துள்ளவர்களுக்கு சுகம்.சொத்தில்லாதவர்களுக்கு அழுகையும், பற்கடிப்பும்.

இது இந்த முதலாளித் துவ சமுதாயத்தின் விதி. இதைக் கடவுள் விதித்த விதி என்றால் நான் நம்பமுடியுமா?

எல்லாவற்றையும் யோசிக்க யோசிக்க எனக்கு மனம் புழுங்குது, தலை இடிக்கிறது, எல்லாம் இருளாக இருக்கிறது. எதிர்காலத்தில் ஒரு வெளிச்சமும் தெரியவில்லை.

எங்கள் பிரச்சினைகள் எல்லாம் தீரும். உனக்கு ஆறுதல் கிடைக்கும் என்று அப்புவுக்கு கூற எனக்கு ஒரு தைரியம் இல்லை. வீட்டில் எல்லோரும் தியாகம் செய்து என்னை

மெத்தப் படித்தவனாக்கி விட்டுள்ளார்கள்.

நான் ஆளாகி அவர் களையெல்லாம் உருப்படியாக்கு வேனாம்!

எனக்கேன் இத்தனை பொறுப்புகள்?

அவர்களுக்கு நான் என்ன செய்யப்போகிறேன்.

அப்புவை பிடித்த பிரச் சினைகள் என்னையும் விட்ட பாடில்லை. பிள்ளைகளையும் சிக்காராக பிடித்துக்கொண்டது. இனிச்சாகும் வரை விடுதலை இல்லையோ!

"அப்பனே முருகா! என் பிள்ளைகளுக்கு வழிவிடு!"

அம்மா இன்னம் நித்திரை கொள்ளவில்லை.

"தம்பி!" என்னைக் கூப்பிடுகிறார்.

"என்னம்மா?"

"நீ இன்னும் நித்திரை கொள்ளவில்லையே?"

"நான் படித்துக் கொண்டிருக்கின்றேன்"

படிக்கிறதென்டால் சரி: அம்மாவுக்கு சந்தோஷம் தான்.

"தம்பி இந்த செல் வத்தை இன்னும் காணேல்லை யடா"

"அவன் வருவான் நீங்கள் படுங்கோ: அவன் படத்துக்குப் போயிருப்பான்."

அவன் ஊரிலுள்ள பொடியன்களோடு இப்படித்தான் திரிவான். அவன் மட்டுமா இப்படி அலைகிறான்? அவனப்போல படித்த வாலிபர்கள் வேலையின்றி நாடு முழுவதும் இலட்சக் கணக்கில் அலைகிறார்களே!

அவனை நான் எப்படிக் குற்றம் சொல்வது!

ஏன் மக்களுக்கு இவ் வளவு தொல்லைகள்? மன வேதனைகள்?

நான் வாழ்கின்ற நாடு ஒரு ஜனநாயக நாடு! அப்படியா? வேறென்ன?

இங்கு ஒவ்வொருவருக்கும் தனிமனித சுதந்திரம் உண்டு ஆம் உண்டு! உண்டு!!

தனக்குத்தானே வேலை தேடிக்கொள்ள வேணும்: இருக்க இடம் தேடிக்கொள்ள வேணும்: வீடு கட்டிக்கொள்ளவேணும். பிள்ளைகளைப்பெறவேணும்: அவர்களுக்கு தேவையான எல்லாம் கொடுத்து வளர்க்க வேணும், படிப்பிக்கவேணும், பள்ளிக்கூடம் தேடிக்கொள்ள வேணும்.

படித்துமுடித்தால் வேலை. அதுவும் தேடிக் கொடுக்க வேணும்.

பெண் பிள்ளையா? அதற்கு திருமணம் செய்து வைக்க வேணும். பிள்ளைகளின் முன்னேற்றத்தையிட்டு கவலைப் பட வேணும்.

இவற்றை உன்னால் சரிவர நிறைவேற்ற முடிய வில்லையா?

இவையெல்லாம் பெரும் தொல்லைகளாக இருக்கிறதா?

இது உன் சொந்த விஷயம்: உன் தனிமனித சுதந்திரம். இதில் யாரும் தலை யிடமாட்டார்கள். அரசாங்கமும் தான்! ஒவ்வொருவருக்கும் ஒரு அனுபவமிருக்கும்.

என் நண்பன் ஒருவனின் அக்காவுக்கு மூன்று பெண் பிள்ளைகள். கணவன் கூலி வேலை செய்துகொண்டிருந்தான். தீடீரென செத்துவிட்டான். அவர்களுக்கு சொந்த நிலமில்லை. வீடு இல்லை. வாழ வேறொரு வழியுமில்லை. மூன்று பெண் பிள்ளைகளும் படித்துள்ளார்கள். அந்த தாய் மூன்று பிள்ளைகளோடு வாழ்வதற்கு படாத கஷ்டமெல்லாம் படுகுது.

சொந்தக்காரர் எவ்வளவுக்கு உதவி செய்வார்கள்? யாழ்ப்பாணத்தில் பெண்கள் வேலை செய்வதற்கு என்ன வசதி உண்டு? கடைசியாக அந்த மனுஷி தன் கஷ்டமெல்லாம் எழுதி அரசாங்கத்திடம் உதவி செய்யும்படி தன் பிள்ளைகளுக்கு வேலை கொடுக்கும்படி கேட்டிருந்தாள்.

அரசாங்கத்திடமிருந்து ஒரு பதிலும் இல்லை.

“தம்பி அரசாங்கம் எமக்கு வாழ்வு அளிக்காதா?” என்று என்னை அந்த மனுஷி ஒரு நாள்

கேட்டுது. நான் படித்தவன் இல்லையா?

நான் என்ன பதில் சொல்வேன்?

"இன்னம் கொஞ்சம் நாள் பாத்திட்டு நாங்கள் ஆத்தில குளத்தில விழுந்து சாகவேண்டியது தான்" என்ற என்னிடம் கண்கலங்கிக் கூறினாள் அந்தத் தாய். இதென்ன? இப்படி எத்தனை கேஸுகள்!

அது சரி: அவனுக்கு தனிமனித சுதந்திரம் உண்டு.

என் அப்பனுக்கும் தனி மனித சுதந்திரம் நூறு வீதம்.

அதனால் தான் எல்லாச் சுமையும் அவர் தலையில்!

சுமையை ஏற்றுவது இந்த சமுதாயம்.

சுமக்க வேண்டியது அவன்:

சுமையை இறக்க வேண்டியதும் அவனே: இறக்க முடியாவிட்டால் சுமையோடு சாகவேண்டியதும் அவனே!

இப்படி ஒவ்வொருவன் தலையிலும் சுமை ஏற்றப்படுவதால் தான் ஒவ்வொருவனும் படு சுயநலவாதி ஆகிவிடுகிறான். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இலங்கை மனிதர்கள் கூடிவாழும் ஒரு சமூகம் போல தோன்றுகிறது.

ஆனால் உள்ளே

தன் பெண்டு, தன் பிள்ளை, தன் வீடு, தன் சொத்து என்று எல்லாம் தனக்கு என்ற சுயநலத்தோடு இயங்கும். ஒருவனோடு ஒருவன் போட்டி போடும் தனிமனிதர்களின் கூட்டம்.

சிரித்துப்பேசினாலும், இரகசியமாக ஒருவன் ஒருவனுக்கு எதிரி தான், அதனால் உறவு எல்லாம் பொய்: அன்பெல்லாம் பொய்! இல்லையா? தனிச்சொத்துடைமை முதலாளித்துவ சமூக அமைப்பு உருவாக்குவது சுயநலமுள்ள மனிதர்களைத்தான்.

ஐயகோ! பலவழிகளிலும் இந்த முதலாளித்துவ சமுதாயம்

அசிங்கம்! அசிங்கம்!! அசிங்கம்!!!

என்னை இந்த நிலைக்கு ஆளாக்குகின்ற,

என் சகோதரிகளை வாழ விடாது தடைச்சுவர்கள் எழுப்பு கின்ற,

என் தம்பிமாரை உருப் படியில்லாதவர்களாக ஆக்கு கின்ற,

என் அப்புவையும், அம்மாவையும் நிம்மதியின்றி உருக்குலைக்கின்ற, இந்த கேடு கெட்ட சமுதாய அமைப்பை,

ஏழை விவசாயியின் மகனாகிய நான் -

வெறுக்கின்றேன! வெறுக் கின்றேன்!! வெறுக்கின்றேன்!!!

என் அப்பனுக்கே இப்படி யென்றால்?

நான் திருமணம் செய்து, பிள்ளைகுட்டி பெற்று வாழ முற்பட்டால், அப்பனுக்குச் செய்தது போலத்தானே என் தலைமேலும் சுமைகளை சுமத்தி விடும். என் காலத்தில் அச்சுமை இன்னும் பாரமாக இருக்கும். என் தாயே! இந்த சமூக அமைப்பும், இந்தக்கேடுகளும் என் அப்ப னோடு அழியட்டும். என்னால் அப்படி வாழ முடியாது.

ஐயோ! என்னால் வாழ முடியாது.

எனக்கு ஒரு மகன் பிறந்து அவனும் இப்படித்தானே சுமை தூக்கி வாழவேண்டும்!

சுயநலவாதியாக வாழ வேண்டும்!

எனக்குப் பல மக்கள் பிறந்து, அவர்களில் -

ஒருவன் கள்ளனாக,

ஒருவன் ஏமாற்றுக் காரனாக,

ஒருத்தி வேசையாக,

ஒருத்தன் தறுதலையாக வாழும்படி இந்த சமுதாயம் நிர்ப் பந்தித்தால்? நிச்சயம் அப்படித் தான் நடக்கும்: நடக்கும்!

ஓ! ஓ!! விவசாயிகளின் புத்திரர்களுக்கும், தொழிலா ளிகளின் பிள்ளைகளுக்கும் விரோதமான -

இந்த ஒர வஞ்சகமான சமூக அமைப்பு -

எமக்கு வேண்டாம்!

வேண்டாம்!!

வேண்டவே வேண்டாம்!!!

நான் சொல்கிறேன். இந்தச்சுரண்டல் சமுதாய அமைப்பை ஒழித்துக்கட்டுவோம்!

ஒழித்துவிட்டு அந்த மண்ணில் - தாய்த்திருநாடாகிய இலங்கையில் எல்லோருக்கும் வேலை. எல்லோருக்கும் மகிழ்ச்சி, எல்லோருக்கும் நிம்மதி அளிக்கின்ற சுரண்டலற்ற ஒரு சோஷலிஸ சமுதாயத்தை அமைப்போம்!

இப்படி நான் எண்ண எனக்கு சுதந்திரம் இருக்கிறது! இதைவிட வேறு ஏதாவது பேசுகின்ற அரசியல்வாதிகள் பொய் சொல்லுகிறார்கள்! பொய் சொல்லுகிறார்கள்!!

நான் இப்ப யோசித்தவற்றைத்தான் எழுதப் போகிறேன்.

மக்கள் அறியட்டும்!

இவற்றை எல்லாம் எண்ண எண்ண மனதுக்கு நிம்மதி இல்லை. எரிந்து புகைக் கிறது. எழுதத்தான் வேணும்.

இப்ப கண்ணைத்தூங்குகிறது: இல்லை இல்லை இப்பவே எழுத வேணும்.

*நன்றி களனி - 1973*

*'எனக்குள்ளே ஒரு எரிமலை புகைக்கிறது' என்ற இந்தச் சிறு கதை 1973 ஆம் ஆண்டு 'களனி' மாத இதழில் வெளிவந்தது. இலங்கைத் தமிழ் சிறுகதை வரலாற்றில் தனக்கெனத் தனியிடத்தை ஏற்படுத்திக் கொண்ட யோ.பெனடிக்ற்பாலனின் ஆக்கம் இது. இடதுசாரி அரசியற் சித்தாந்தத்தினாலும், முற்போக்கு இலக்கிய இயக்கத்தாலும் கவரப்பட்டவர் என தன்னைக் குறிப்பிட்டுக் கொண்ட இவர், சமூகத்தில் அடக்கி யொடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளும் சிந்தனைத் தாக்கங்களையும் விளக்குவதான சிறுகதைகளை எழுதியுள்ளார்.*

ஆசிரியர்: அடே ராமு விஷத்துக்கும் விலைவாசிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

ராமு: விஷமும் ஏறும். விலைவாசியும் ஏறும். விஷம் இறங்கும் ஆனால் விலைவாசி இறங்காது.

# கல்வி

## வர்க்க சமுதாயத்தில் அதன் அடிப்படையும் நோக்கமும்.

மு.கார்த்திகேசன் B.A. (Hon)

சரி பிழைகளைச் சொல்வதற்கு தமக்கு அதிகாரம் உண்டு என ஒவ்வொருவரும் கருதுகின்ற விடயம் கல்வியாகும். அது சட்டமாக இருந்தாலென்ன, மருத்துவமாக இருந்தாலென்ன, பொறியியலாக இருந்தாலென்ன, அல்லது கலையாக இருந்தாலென்ன அங்கு ஒரு கருத்தை வெளியிடுவதற்கு ஒரே விதமான உற்சாகமும் உறுதியும் இருப்பதில்லை. அவைகள் நிபுணர்களால் மட்டும் கருத்துகள் சொல்லப்படும் தலைப்புகளாக கருதப்படுகின்றன. ஆனால் கல்வித்துறையைப் பொறுத்தவரை எவராயினும் தமது கருத்தை வெளியிடக்கூடிய ஒரு துறையாகக் கருதப்படுகின்றது.

இது ஏனெனில் கல்வி சிறு பிள்ளைகளுடன் சம்பந்தப்படுவதாலும் அத்துடன், எந்த வயது வந்தவனும் சிறு பிள்ளைகளுக்கு எது நல்லது என்பதைச் சொல்வதற்கு ஏற்ற முதிர்ச்சி உள்ளவன் தான் என்று கருதுவதாலுமாக இருக்கலாம். இன்று கல்வி சர்வ வியாபகமானதாகக் கருதப்படுகிறது என்ற உண்மையும் சில வேளைகளில் மற்றக் காரணமாகவும் இருக்கலாம். ஆகவே கல்வி சம்பந்தமாகச் சரி பிழைகளைக் கூறுவதற்கு எவராயினும் போதியளவு கற்றுள்ளார்கள்.

ஆனால் பிரச்சினை என்னவென்றால், கருதப்படுவதைப் போன்று கல்வி சர்வ வியாபகமானதா? இல்லையா? என்பதே. கூடுதலாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் கல்வி சர்வ வியாபகமானதாக மட்டுமல்ல, கட்டாயமாகவும் கருதப்படுகின்றது. பரந்த அளவிற்கும் ஒரு உயர்ந்த மட்டத்திற்கும் கல்வியை வளர்ச்சியுறுத்தக்கூடிய நாடு என்று கருதப்படும் இலங்கையை எடுத்துக் கொண்டால், இந்த நாட்டின் எல்லாப் பிள்ளைகளுமே பாடசாலைக்குப் போகிறார்களா? இல்லை. அவர்கள் அப்படி செய்திருந்தாலும் கூட அவர்கள் எல்லாருமே சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட கல்வியின் அடிப்படை, ஆகக்

குறைந்த மட்டத்தைப் பூர்த்தி செய்கின்றார்களா? இல்லை.

இன்று இந்த இருபதாம் நூற்றாண்டில் சர்வ வியாபகமான, கட்டாயமான கல்வித் திட்டத்தின் கீழ் இது தான் நிலையென்றால் கடந்த காலத்தின் நிலைமை என்ன? அன்று நிலைமை மிகவும் மோசமானதாக, ஜனத்தொகையில் மிகச் சிறுபான்மையினரின் வரம்புக்குள் மட்டும் தான் கல்வி இருந்தது. பாடசாலைக்கு அனுப்புவதற்கு வசதி படைத்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு, அல்லது சமுதாயத்தில் தமது வேலைகளை செய்வதற்காகப் படிப்பிக்கப்பட வேண்டிய சமூகத்தின் பிரிவுகளைச் சேர்ந்த சாதியினருக்கு, அல்லது பாரம்பரியமாக கற்றுத் தந்தவர்களின் பிள்ளைகளுக்கு மட்டும்தான் கல்வியிருந்தது.

ஆகவே வர்க்கங்கள் அல்லது சாதிகள் என்ற சமூகப் பிரிவினைகள்தான் கல்வி யாருக்கு? என்பதை நிர்ணயித்தன. அன்று கல்வி கற்க வசதி படைத்தவர்கள் முக்கியமாக ஆளும் வர்க்கத்தை சேர்ந்தவர்களாக இருந்தனர். நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் அது நிலபிரபுக்களுக்காக இருந்தது. முதலாளித்துவ சமூக அமைப்பில் நிலப்பிரபுக்களை ஆதரவாகக் கொண்ட முதலாளிகளுக்காக இருந்தது. இதுதான் மேற்கத்திய நாடுகளின் உண்மையான நிலைமை. ஆனால் கிழக்கில் சமுதாயத் தரங்கள் ஒரு வித்தியாசமான நிலையிலிருந்தது. யப்பானிலும், சீனாவிலும் ஒரு தளர்ந்த பாரம்பரிய அடிப்படையில் கல்வி சமூகத்தின் ஒரு பிரிவுக்குள் கட்டுப்படுத்தப்பட்டது. அதே வேளையில் இந்தியாவில் பிறப்பால் நிர்ணயிக்கப்படுகின்ற இறுக்கமான சாதி அமைப்பில் சமூகத்தில் அவரவர்களின் கடமைகளுக்கேற்ப கல்வி நிர்ணயிக்கப்பட்டது.

இந்த அடிப்படையில் படிப்பு வாசனையற்ற - கல்வியே கற்காத அல்லது மிகச் சிறிதளவு படித்திருக்கக் கூடியதான பரந்த வெகு ஜனங்களிடமிருந்து தங்களைப் பிரித்துக்கொண்ட, அவர்களிலும் பார்க்க தாம் மேலானவர்கள் என்று கருதுகின்ற ஒரு படித்த பிரமுகர்கள் கூட்டம் இயற்கையாவே தோன்றியது. உதாரணத்திற்கு பிரித்தானியாவின் பொதுப் பாடசாலைகள் என்று கூறப்படுகின்ற ஆனால் உண்மையில் தனியார் பாடசாலைகளான எற்ரன், ஹரோ

போன்றவைகள் ஆளும் வர்க்கங் களின் பிள்ளைகளுக்கும், வசதி படைத்தவர்களின் பிள்ளை களுக்கும் மட்டும்தான் கல்வி யளிக்கின்றன. இவர்களில் சிலர் கல்வியின் உயர்ந்த மட்டத்தை யடைவதற்காக ஒக்ஸ்போர்ட், கேம்பிறிட்ஜ் ஆகிய சர்வகலா சாலைக்குச் சென்றனர். இந்தி யாவில் வரம்புக்குட்பட்ட குருகுல அமைப்பில் படித்த பிரமுகர்கள் பிராமணர்களாவார். அதே வேளை யில் சீனாவில் "மண்ட ரீன்ஸ்" எனப்படுபவர்கள் படித்த பிரமுகர் களாக விளங்கினர்.

இன்று விவேகமான வாழ் வுக்கு ஒவ்வொருவருக்கும் கல்வி இவ்வளவு முக்கியமாக கருதப் படும் அதே வேளையில், கடந்த காலத்தில் ஏன் இந்த வகையில் கட்டுப்படுத்தப்பட்டது? மனிதனின் வாழ்வுக்கு இன்றியமையாத வெறும் ஒரு ஆடம்பரப் பொரு ளாக, ஒரு பெருமை தரும் அணி கலனாக இது கருதப்பட்டதா?

இல்லை இது அதிகாரத் தின் ஒரு கருவி - அரசியல் பொருளாதார, இராணுவ, சமூக அதிகாரத்தின் கருவி உலகரீதி யான வாக்குரிமை, உலகரீதியான கல்வி, ஜனநாயகம், மக்களின் மக்களால் மக்களுக்காக நடத்தப் படுகின்ற அரசாங்கம் என்று சொல்லப்படுபவைகள் இருந்த போதும் கூட, இன்றும் இன்னமும் அது அதிகார வர்க்கத்தின் ஒரு கருவியேயாகும்.

இது ஒடுக்கப்பட்ட வர்க் கத்தை அல்லது வர்க்கங்களை கீழ் நிலையில் வைத்திருப்பதற்கு ஆளும் வர்க்கத்தால் பாவிக் கப்பட்ட, பாவிக்கப்படுகின்ற ஒரு கருவியாகும். உழைக்கும் வெகு ஜனங்களை அடக்கிச் சுரண்டு வதற்கான சட்டங்களை இயற்றிய வர்களும், பொது விவகாரங்களை விவாதித்தவர்களும், சபைகளில் கூடியவர்களும் இந்தப் படித்தவர் களே. இதே படித்தவர்கள் தான் ஆளுநர்கள் என்ற தோரணையில் சட்டத்தை அமுல்படுத்தியவர்கள். சுரண்டப்படுபவர்களால் சுரண்டல் அமைப்பு முறைக்கு எதிராக எங்காவது பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்ட போதெல்லாம் தெய்வ உதவி கோரப்பட்டது. கட வுளுடன் கூட யார் தொடர்பு கொள்ளக் கூடியவர்களாயி ருந்தார்கள்? படிப்பு வாசனையற்ற வர்களோ, அடிமைகளோ, விவ சாயிகளோ, அல்லது அரை குறை படிப்பாளிகளோ அல்ல வேதங் களை ஓதக்கூடிய, அதன் 'புனித மான' பொருளைக் கூறக் கூடிய, மந்திரங்களைச் சொல்லக் கூடிய

படித்தவர்கள் மட்டுமே கடவுளுடன் தொடர்பு கொண்டார்கள். அதுமட்டுமல்ல, தேவைப்பட்டால் பிசாசுகளையும் கூப்பிடக் கூடியவர்களாயிருந்தார்கள்!

'ஸ்கூல்' என்ற வார்த்தையின் மூலத்திலிருந்தே வர்க்க அதிகாரத்தின் கருவியாக கல்வி இருந்து வந்துள்ளது என்பது காட்டப்படுகின்றது. ஓய்வு என்று சொல்லப்படுகின்ற 'ஸ்கொலா' என்ற கிரேக்க சொல்லிலிருந்து இந்த வார்த்தை தோன்றியது. ஓய்வு நேரத்தைக் கொண்டிருக்கக் கூடிய வர்க்கத் தட்டைச் சேர்ந்த பிள்ளைகளுக்கே கல்வி இருந்துள்ளது என்பது வெளிப்படையான முடிவாகும். தனது வேலைகள் சகலவற்றையும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அல்லது வர்க்கங்களைக் கொண்டு செய்வித்த, செய்வதற்கு தனக்கென ஒரு வேலையுமே இல்லாத சொத்துடைமை வர்க்கத்தை தவிர வேறு யாருக்கு ஓய்வு நேரம் இருந்தது? சொத்துடைமை வர்க்கந் தான் ஆளும் வர்க்கமாக இருந்தது, இன்றும் இருக்கின்றது. ஆகவே கல்வி மிகச் சமீபகாலம் வரைக்கும் ஆளும் வர்க்கத்துக்கே உரியது.

அடுத்த கேள்வி என்னவெனில், கல்வியின் நோக்கம் என்ன? என்பதாகும். அது ஆளும் வர்க்கத்துக்காக கொடுக்கப்பட்டதுடன், மற்றைய வர்க்கங்களுக்கும் ஆளும் வர்க்கத்தால் கொடுக்கப்பட்டாலும் வர்க்க ஆதிக்கமுள்ள சமூகத்தின் அமைப்பு, கொள்கைகள், தத்துவம் ஆகியவற்றை ஆளும் வர்க்கத்தின் பிள்ளைகளுக்குப் போதிப்பதே அதன் நோக்கமாகும். ஒரு சமூகம் எந்தளவுக்கு வேலை செய்தது, ஆளும் வர்க்கத்தின் நலனுக்காக எப்படி ஒரு சமூகம் நிலை நிறுத்தப்படவேண்டும் என்பதும் அவர்களுக்குப் போதிக்கப்பட்டது.

மற்ற வர்க்கங்களைச் சேர்ந்த பிள்ளைகளைப் பொறுத்தவரை சர்வவியாபக மான கல்வியின் நவீன நடை முறையின் கீழ் வர்க்க சமூகத்தின் பண்புகளோடு அதனுடைய கூறப்படுகின்ற விடுதலை, சமத்துவம், தோழமை, ஜனநாயகம், உலக நீதி ஆகியவற்றையும் போதித்து வர்க்க ஆதிக்க சமூக அமைப்பை ஏற்றுக் கொள்ளவும், பாதுகாக்கவும் போதிக்கப்படுகின்றது.

ஆகவே வர்க்க சமுதா

யத்தில் அடக்கி, ஒடுக்கி, சுரண்டப்படுகின்ற மக்கள் வெகு ஜனங்கள் கல்வியின் உண்மையான வர்க்க அடிப்படையை அறிந்துகொள்வது அவசியம். இதன்மூலம் தான் மக்களின் சகல பகுதியினருக்கும் கல்வி வசதியை விஸ்தரிப்பது வர்க்க அடக்குமுறையிலிருந்து அவர்களை விடுவிக்கும் என்ற சிந்தனை வழி நடத்தப்படாமலிருக்க முடியும்.

இன்றைய கல்வியும் வர்க்க ஆட்சி தொடர்ந்திருப்பதை சகித்துக்கொள்ளும்படி அவர்களை ஏமாற்றுகிறது.

*நன்றி -களனி- 1973*

---

## பிரிட்டனில் அடிமை ஒழிப்புச் சட்டம்

மனிதர்களை மனிதர்களே அடிமை களாக வைத்திருக்கும் பாரம்பரியம் பிரிட்டனில் நிலவிய காலமொன்று இருந்தது. பிரிட்டனில் மட்டுமல்ல, பிரிட்டனின் ஆளுகைக் குட்பட்ட பல நாடுகளிலும் இந்த அடிமை முறை நிலவியது. இந்த அடிமை முறைமையை ஒழிக்கும் சட்ட மூலம் 1833 ஆம் ஆண்டு பிரிட்டனில் நிறைவேற்றப்பட்டது. பிரிட்டனின் காமன்ஸ் சபையும், பிரபுக்கள் சபையும் அடிமை முறைமையை ஒழிக்கும் சட்டத்தை அந்த வருடம் நிறை வேற்றின.

அப்போது முடிக்குரிய இளவரசராக விளங்கிய மன்னர் நான்காவது வில்லியம் 1833 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி அடிமை ஒழிப்புச் சட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கினார். முடிக்குரிய மன்னர் அங்கீகாரமளித் தால் மட்டுமே சட்டம் நிறைவேற்றப் படும் சூழல் அன்று நிலவியது. இந்தச் சட்டம் 1934 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதியே அமுலுக்கு வந்தது.

ஆரம்பத்தில் பிரிட்டனின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த ஆபிரிக்க நாடுகளிலேயே இந்தச் சட்டம் அமுல்படுத்தப் பட்டது. பின்னர் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு உட்பட்ட சகல நாடுகளிலும் அடிமை ஒழிப்புச் சட்டம் அமுலுக்கு வந்தததது.

-யாதவன் -

# பிரகாசம் - இதழ்

*ம.பாலசிங்கம்*

இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் எதிர் காலம் கேள்விக் குறியாகவே போய்க் கொண்டிருக்கின்றது. இதற்குப் போரே காரணமெனச் சுட்டினர். அது அடக்கப்பட்டு வருடங்கள் ஐந்தாகியுமுள்ளன. இருந்தும் இடதுசாரிக் கோட்பாடுகள் வாழ்க்கை நடைமுறைகளில் தெறிப்பது காணாத காட்சியாகவே உள்ளது. அத்தோடு அனைத்து மக்களதும் சமவாழ்வுக்கான சிந்தனைத் தளமொன்று ஏற்படாமலே காலம் சென்று கொண்டிருக்கின்றது. இடதுசாரிய இயக்க வழிமுறைகளைப் பரம்பல் செய்யும் குறுங் குழுக்கள் செயற்பட்டுக் கொண்டுதான் உள்ளன. அவைகளின் நெறிப்படுத்தலை மக்கள் உள்வாங்குவதற்கு ஆதிக்க சக்திகள் தடையாகவுள்ளன.

இப்படிச் சிதைந்து கொண்டிருக்கும் சமுதாயத்தை மாற்றி, அனைவரதும் உலகம்! எல்லோருக்கும் வாழ்க்கை! என்ற சமுதாய மேம்பாட்டுக்கு விசை கொடுக்கும் இலக்கோடு 'பிரகாசம்' தனது தமிழிலக்கியச் சிற்றிதழ் பயணத்தைத் தொடங்கியுள்ளது. இந்த அரிய மக்கள் சார் இலக்கியச் செயற் பாட்டை வரவேற்று வாழ வைப்பது தமிழ் வாசகனது மேலான கடமையாகும்.

எவ்விதமான பகட்டுமில்லாது, மிக எளிமையாக வடிவமைக்கப் பட்டிருக்கும். முதலாவது இதழின் முகப்புத் தோற்றம், வேற்றுமை வேலிகளைக்கடந்து, மானுட ஒருத்துவத்தை உயிர் மூச்சாகக் கொண்டவர்களுக்கு பெரு விருந்து தான். மொழி மானுடத்துக்கு வேலி அல்ல என உணர்த்துவது போல் மும்மொழி வாசகங்கள் அட்டையில் பதிவாகி உள்ளன. இது இன ஒருத்துவத்துக்குப் 'பிரகாசம்' நாட்டும் அடிக் கல்லன்றோ!



சட்டத்தரணி இராஜகுலேந்திராவின் பேட்டியின் வெளிப்பாடுகள், அவரொரு அசல் மனித நேயரென்பதை வெளிப்

படுத்துகின்றன. இன்றைய இடது சாரிகள் பற்றிய சலிப்பு அவரிடமும் காணப்படுகின்றது! ஒரு புதிய இடதுசாரியச் சிந்தனைப் பண்பாட்டுத் தளத்தை நாடுகிறார். இன்று எக்கச்சக்கமாக உள்ள இடதுசாரிய அபிமானிகள் முன் வந்து அதைச் செய்ய வேண்டும். இதற்கான முன்னெடுப்புகளும் தற்பொழுது செயல்வடிவம் பெற்றிருப்பதை அறியமுடியும். 'மல்லிகை' 'பிரகாசம்' குழுவினர் இராஜகுலேந்திரா போன்றோரின் ஒத்துழைப்பு இம் முன்னெடுப்புக் குக் கிடைத்தால் தோழர் கார்த்தி கேசன், தோழர் 'ஜெயம்' தருமகுலசிங்கம் போன்ற போலி யற்ற, அர்ப்பணிப்புடனான இடது சாரிகள் எமது இன்றைய தலை முறையில் தோன்ற எவ்வித தடையுமிருக்காது. சமூக மாற்ற மும் விரைவில் கைகூடும்.

'முடக்கம்' சிவப்பு! போன்ற நகைச்சுவை எழுத்துக் களும் தொடர்ந்து 'பிரகாசம்' இல் வெளிவர வேண்டும். வெலிகம றிம்சா, தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா ஆகிய கவிஞைகளின் பேச்சோசைப் புதுக்கவிதைகள் இன்றைய வாழ்வின் கோலத்தை படம் போல் காட்டுகின்றன.

பிரகாசம் சஞ்சிகை தமிழ் பேசும் வாசகரின் சிந்தனையில் முற்போக்கைக் கோலமிடச் செய்ய வாழ்த்துகள்.

---

*வாசகர்களின் கடிதங்கள் எதிர்வரும் பிரகாசம் சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்படும். வாசகர்களினால் கேட்கப்படும் கேள்விகளுக்கும் விடையளிக்கப்படும். தங்களது ஊக்கத்துடனான பங்களிப்பே எங்களது முயற்சிகளுக்கான பயனாக அமைய முடியம்.*

தங்களது புதிய ஆக்கங்களும் இதில் வெளியிடப்படுகின்ற ஆக்கங் களுக்கான விமர்சனங்களும் வரவேற் கப்படுவதுடன் அவை எமக்கு ஊக் கத்தை அளிப்பனவும் ஆகும். அவை பத்திரிகைத் தேர்வுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டு பிரசுரிக்கப்படும்.

ஆக்கங்களைச் சுருக்கவும் அவசியமாயின் மாற்றங்கள் செய்வதற்குமான உரிமையை நாம் கொண்டுள்ளோம்

## தீர்ப்புகள்

ஒன்றுபட்ட
உணர்வுகள்
ஒட்ட வைக்கப்
பார்க்கையில்

வேறுபட்ட
உருவங்கள்
விலக்கி வைக்கத்
தீர்க்கின்றன

இதற்குள்
நம் நட்பும்
விதிவிலக்காய்
ஆகிடாது

குதிரைக்குக்
கொம்பில்லை
அதுபோல் தான்
இதுவுமென

கிடைத்திட்ட
என்னுரு(வு)க்காய்
மீண்டும் ஒரு முறை
அழுதிட நினைக்கின்றேன்

*-கார்த்திகாம்பிகை முருகலிங்கம்*

## கடத்தல்

துரை -
இங்கிருந்து போகும்போது
'ஓடனறி வாச்'
கட்டிச்சொல்கின்றார்
ஆனால்...

திரும்பி வரும் போது
ஓட்டமெற்றிக்குடன்
சுமக்க ஏலாமல் சுமந்து
வருகின்றார்.

*சரவணையூர் சுகந்தன்*

## வரிசை

வயிற்றை நிரப்ப
பாண் வரிசையில் நாம்
அவர்களோ - நம்
வயிற்றிலடித்து
வறிகிக்கொண்டதை
வங்கியிற் போட
வரிசையில் நிற்கிறார்கள்.

*-இளமதி*

## குடத்துள் விளக்குகளின் ஒளியை 'பிரகாசமாய்' பரவச் செய்யும் பணியில்

ஒரு மனிதரது வெளித் தோற்றமும் நடவடிக்கைகளும் மாத்திரம் அவரது விம்பத்தை முற்று முழுதாக எடுத்துக் காட்டுவதாய் அமைந்துவிடாது என்பதே உண்மை. எனினும் இவற்றினால் மற்றவர் களிடம் ஏற்படுத்தப்படும் மதிப்பு, அபி மானம், கணிப்பு போன்றவை அளப்பரியது என்பதும் ஏற்றுக் கொள்ளப்படுவதாகவே உள்ளது.

அந்த வகையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனிதர்கள் முற் போக்குச் சிந்தனை கொண்டவர் களாக, மனித நேயமிக்க பண்பாளர் களாக, இடதுசாரி அபிமானிகளாக வென இவ் வெல்லா அம்சங்களும் ஒருங்கே சேர்ந்தவர்களாய் அமைவது அரிதிலும் அரிதான விடயம். இதைவிட உயர் கல்வித்த கமையும், உயர் பதவியும் கொண்ட வர்களிடம் இத்தன்மைகள் ஒருங்கே அமைந்து காணப்படுவது என்பது அதனிலும் அரிதான விடயமே. எனினும் இவ்வாறான அரிய மனிதர்கள் சமூகத்தில் இலை மறை காய்களாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தமான சூழ் நிலைகளே எமக்காயுள்ளன.

அதனால் பிரகாசத் தினால் அறிந்துகொள்ளப்பட்ட இவ்வாறான ஒரு மனிதரைப் பற்றிய, அவருடனான கலந் துரையாடல் அனுபவத்தினை நம் வாசகர் களுக்காக தர விளைகின்றோம்.

சிங்கள மொழியை தனது தாய் மொழியாகக் கொண்ட இவர், தமிழ்ப் பிரதேசத்தில் தமிழ் மொழி மூலக் கல்வியைப் பெற்றுக் கொண்டு, தமது உயர்கல்வித் தகமைகளை அடைந்தள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழ் பிரதேசத்தில் வாழ்ந்த காலத்தைப்பற்றி தாங்கள் கொண்டுள்ள நினைவுகளையும் ஏற்பட்ட அனுபவங்களையும் பற்றிக் கூறுங்கள்.**

தமிழ்ப் பிரதேசத்தில் என்று சொல்லும் போது மன்னாரில் வங்காலை என்னும் ஊரிலே எனது இளமைப் பருவத்தின் மூன்று ஆண்டு களை கழித்த நினைவுகள்

மனதில் பசுமையாகவே பதிந்து உள்ளன. முற்று முழுதும் கத்தோலிக்க தமிழ் கிராமமான இந்த ஊரிலே எனது அப்பாவின் நண்பரான அன்ரு சோசை என்பவரின் வீட்டில் தங்கி இருந்து அவர்கள் குடும்பத்தில் ஒரு வனாகக் காலத்தைக் கழித்தேன். விசேடமாக அவ்வூர் மக்களின் அன்பும், பாசமும், விருந்தோம் பலும், அவ்வூர் மக்களிடையே இருந்த ஒற்றுமையும் எனது சொந்த ஊரில் இருந்த மாதிரி யான உணர்வையே எனக்குத் தந்தது.

இதன் பின்னர், இள வாலை ஹென்றி அரசர் கல்லூரியின் விடுதியிலிருந்து எனது கல்வியைத் தொடரும் போது யாழ்ப்பாண மண்ணின் வாசனையை அனுப விக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இந்த இரு வேறு சூழல்களும், தமிழ் மக்களின் உயரிய மனித நேயங்களை அனுபவிக்கக் கிடைத்த சந்தர்ப்பம் உருவாக அரிய வாய்ப்பாக இருந்தன.

**ஆனால் இன்றைய நிலைமைகளில் சிங்கள, தமிழ் மக்களுக்கிடையிலான உறவு களில் காணப்படும் அரசியல் சம்பந்தமான விரிசல்கள் பற்றி உங்களுக்கு என்ன குறிப்பிடத் தோன்றுகிறது?**

தமிழ், சிங்கள மக்களுக் கிடையிலான விரிவு களுக்கான மூல காரணத்தைச் சிறிது சிந்திப்போமாயின், பெரும்பான்மை சிங்கள மக்களிடம் இருக்கும் தமிழ் மக்கள் மீதான சந்தேகங் களையும் குறிப்பிட முடியும். இதனைப் போக்குவதற்கு ஏதாவது நடவடிக்கைகள் தமிழ் தரப்பால் எடுக்கப்பட்டுள்ளதா எனச் சிந்திப் போமாயின் அது பூச்சியமாகவே உள்ளதாகப் படுகிறது. வரலாற்றுக் காலத்தில் நடாத்தப்பட்ட தென்னிந தியப் படையெடுப்புகளால் சிங்கள அரசர்களும் குடிமக்களும் பாதிக்கப்பட்டமைக்கான ஆதாரங் களினால், தமிழ்த் தரப்பினரை இன்னும் அது போலவே அதே கண்ணோட்டத்துடன் பார்க்கப் பழகியிருக்கிறார்கள்.

சுதந்திரத்திற்குப் பின்பு கூட சிங்கள முற்போக்கு சக்தி களுடன் இணைந்து செயற்பட்ட தமிழ் முற்போக்காளர்களின் அளவும் குறைவாகவே காணப் படுகிறது. உலகத்துக்கு எமது பிரச்சனையை சொல்வதற்கு எடுத்த முயற்சிகளில் குறிப்பிட்ட முயற்சிகளை தமது அயலாரான சிங்கள சகோதரரர் களுக்கு சொல்ல முற்பட்டிருந்தால் இது, சந்தேகங்களை ஓரளவுக காவது குறையச் செய்திருக்கும். இனி யாவது இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டால் எமது பிள்ளை களின் எதிர்காலம் சந்தோசமாக அமையும்.

சிங்களத் தரப்பிலும் கூட இனவாத உணர்வுகளுக்கு அல்லது இன வாத சக்தி களுக்கு துணை போகும் நிலைப் பாடுகளைத் தவிர்த்து, சிறு பான்மையினரையும் சமமாக நடாத்தி சுமூகமாக வாழும் சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் மனப்பாங்கில் பாரிய இடை வெளி ஒன்று காணப்படுகின்றது. இதை இலக்கியமும், கலாசார மும், முற்போக்குக் கொள்கை களும் மாற்றக்கூடிய சந்தர்ப்பங் கள் உள்ளன. ஆனால் இதற் கான முன்னெடுப்பினை யார்? எங்கே? எப்போது? தொடங்குவது என்பது தான் இப்போதுள்ள பிரச்சினை.

முழு நாட்டையும் வசீ கரிக்கக்கூடிய தலைமைத்துவ மும் அதன் செயற்பாடுகளும் மட்டும் தான் இதனை மாற்ற முடியும்.

**ஒரு தமிழ் பிரஜை போலவே திருத்தமான உச்சரிப் புடன் அழகாகவும் சரளமாகவும் தமிழைப் பேசுகிறீர்கள். இதற் காக பிரத்தியேக கவனம் எடுத்துக் கொண்டீர்களா?**

தமிழ் மொழி ஒரு இனிமையான மொழி. அதைச் சரி யாகக் பேசுவதும் கேட்பதும் ஒரு தனி அழகு. என்னால் இயன்ற வரை இந்த மொழிக்கு கௌரவத்தை அளிப்பதற்காக இதைச் சரியாகவும் திருத்தமாகவும் பாவிப்பதற்கு முயற்சிக் கின்றேன்.

**வேறு ஏதாவது கூற விரும்புகிறீர் களா?**

'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்பதற்கேற்ப வெளி நாட்டில் வாழ்ந்து கொண்டிருப்ப வர்கள் வேறுபட்ட நாட்டு வேறு பட்ட கலாசாரங்களைக் கொண்ட மனிதர்களுடன் சுமூகமாகப் பழகி சமாதானமாக இருக்கின் றார்கள். அவ்வாறிருக்கும்போது, எங்கள் நாட்டில் மொழி, கலாசாரம் என்பவற்றில் மிகுந்த தொடர் பினைக் கொண்டவர் களான சிங்கள, தமிழ் இனத்த வர்களான நாம் ஏன் அவ்வாறு வாழ முடியாமல் உள்ளது என்பதை ஒவ்வொருவரும் சிந்திப்பது அவசியமாய் இருக்கிறது.

'எரியும் வீட்டில் பிடுங் கியது இலாபம்' என எமது நாட்டை எவரும் பிரயோகப் படுத்த இடமளிக்காது நாம் எம் விடயங்களை நல்ல முறையில் தீர்க்க முற்பட்டால் நம் எல் லோருக்கும் சுபீட்சமாக இருக்கும்.

இச் சந்தர்ப்பத்தை வழங் கிய பிரகாசம் பத்திரிகைக்கு எனது நன்றிகள்.



# மொன்ரிசோரிப் பாடசாலைகளின் முன்னோடி

மொன்ரிசோரிப் பாடசாலைகள் உலகின் பல நாடுகளிலும் இயங்குகின்றன. சிறு பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வியை ஊட்டுவதற்கான அடித் தளத்தை இத்தகைய கல்வி நிறுவனங்கள் வழங்குகின்றன. மூன்று வயதில் சிறுவர், சிறுமியர் மொன்ரிசோரிப் பாடசாலை களுக்குச் செல்வதை எம்மால் காணமுடி கிறது. சிறுவர்களுக்கு எப்படி நுட்பமான முறையில் கல்வி புகட்டுவது என்பதற்குப் பல அறிவுசார் நிகழ்ச்சிகளை மொன்ரி சோரி அம்மையார் அறிமுகப்படுத்தி யிருந்தார்.

மரியா மொன்ரிசோரி என்பது இவரது இயற்பெயர். இத்தாலி யில் 1870ஆம் ஆண்டு பிறந்த இவர் அந்த நாட்டில் முதன் முதலாக டாக்டர் பட்டம் பெற்ற பெண்ணாகத் திகழ்ந்தார். சிறுவர்களைப் பீடிக்கும் நோய் களுக்கு சிகிச்சையளிப் பதையே பிரதான கடமையாக இவர் கையேற் றிருந்தார். 1907 ஆம் ஆண்டு இத்தாலிய நகரான ரோமில் ஏழைகள் வாழும் பின்தங்கிய பகுதிகளில் உடல் பாதிப்புக் குள்ளான சிறு பிள்ளைகளுக்கு கல்வி போதிக் கும் பணியை இவர் ஆரம்பித்தார். சிறு பிள்ளை களுக்குச் சகல நடவடிக்கைகளுமே அர்த்த முள்ளவையாகவும், போதனை யூட்டுவதாகவும் அமைய வேண்டுமெனபதே இவரின் அடிப்படை நோக்கமாகும். சூழல் களிலிருந்தே சிறு பிள்ளைகள் அனைத்தையும் கற்றுக் கொள் கிறார்கள் என்பதில் இவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.

சிறு பிள்ளைகளுக்கு உகந்ததான தளபாடங்கள், உபகரணங்கள் ஆகியவற்றை இவர் ஏற்படுத் தினார். தனது பாடசாலையில் சிறு பிள்ளைகள் ஏறி, இறங்கக் கூடிய படிக்கட்டுக்களையும் இவர் அமைத்தார். மொன்ரிசோரிப் பாட சாலைகளில் போதிக்கும் ஆசிரியர்கள் கற்றலிலும், கற்பித் தலிலும் முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்பதே இவரது நோக்கமாகும். மொன்ரிசோரிப் பாடசாலைப் பிள்ளைகளுக்குப் போதனை ஊட்டுவது தொடர்பான நூலொன்றினையும் இவர் எழுதி வெளியிட்டார். இன்றும் அவரது போதனை முறைகள் உலகெங்கும் கடைப் பிடிக்கப்படுகின்றன. 1952 ஆம் ஆண்டு தனது 82 ஆவது வயதில் இவர் காலமானார்.

*-அமெலியா சைனி*

# நேர் காணல்



**பண்பு,பணிவு, நேர்மை, கடின உழைப்பு என்பவற்றால் மிக இளவயதிலும் மிகக் குறுகிய காலத்திற்குள்ளும் உயர் நிலைக்கு வந்ததன் மூலம் தனது சமூகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருப்பவர் திரு. வடி வேற்கரசன் அவர்கள்.**

**தங்களது பதவி நிலை பணி விபரம் பற்றி தாங்கள் குறிப் பிடின்?**

வெள்ளவத்தை ஜெயச் சந்திரன்ஸ் இல் பொது முகாமையாளராக் கடமை புரிகின்றேன்.

**மிக இளம் வயதி லேயே இவ்வாறான உயர் பதவியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பினை அடைந்தமை பற்றி என்ன கூறிக்கொள்ள விரும்பு கின்றீர்கள்?**

எனது கல்வியை முடித்துக் கொண்டபின் ஒரு புடவை நிறுவனத்தில் விற்பனை யாளராக முதலில் கடமை புரிந்தேன். அந்நிறுனத்தில் கிடைக்கப்பெற்ற அனுபவங்கள், வழிகாட்டல்கள் என்பவற்றினால் படிப்படியாக முன்னேறினேன். சிறிது காலத்தின் பின் தற்போது பணிபுரியும் நிறுவனத்தில் இணைந்து கொண்டேன். இந் நிறுவனத்தின் உரிமை யாளர்கள் எனது அனுபவத் தையும், தகமைகளையும் கருத்திற் கொண்டிருப்பினும் அதற்கு மேலாக பெருமன துடன் என்னில் நம்பிக்கை கொண்டு எனக்கு இவ்வுயர் பதவியையும் பொறுப்புக்களை யும் வழங்கியுள்ளார்கள். அத்தோடு இந்நிலைமையை நான் இவ்வயதிலேயே அடை வதற்கு எனக்கு சிறந்த வழி காட்டல்களையும் வழங்கி யுள்ளார்கள். இதற்காக அவர் களுக்கு நான் இத்தருணத் தில் மீண்டும் எனது நன்றி களைக் கூறிக்கொள்கின்றேன்.

**உங்களுடைய இளமைப் பராயமும் பாடசாலைக் காலமும் எவ்வாறு அமைந்திருந்தன?**

நான் கண்டி, பன்விலை விக்னேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்விகற றேன்.அப்போது வடபிரதேசத்து ஆசிரியர்கள் பலர் அங்கு கடமை யாற்றிக் கொண்டிருந் தார்கள். அவர்கள் எவ்வித பாகுபட்டுணர்வுமின்றி, எம்மை கல்வியில் உயர்ந்த வர்களாகவும் நற்பிரஜை களாகவும் உருவாக்குவ தற்காக எம்மில் மிகுந்த அக்கறையும்,அன்பும் அதேசமயம் தேவையான கண்டிப்பும் கொண்டு அரும் பாடுபட்டார்கள். என்றும் என் நினைவில் நிற்பவர்களாக அகிலா ரீச்சர், சுமதி ரீச்சர், சண்முகராஜா சேர் ஆகிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் உள்ளார்கள். அத்துடன், ஆனந்தி ரீச்சரும் எமக்காக மிகுந்த அக்கறை கொண்டு வழிநடத்தினார்.

**உங்கள் சொந்த ஊரினதும் அந்தமக்களினதும் உயர்ச்சிக்குப் பாடுபடும் எண்ணப் பாங்கின் அவசியம் பற்றிஎன்னநினைக்கிறீர்கள்?**

என்னுடன் கல்விகற்றவர்கள் அனைவரும் வாழ்வில் முன்னேற்றமடைய வேண்டும் என்ற பேரவா எனக்குள் எப்போதும் உண்டு. நீங்கள் ஓய்வுபெற்ற பின்னரும் பிரகா சத்தின் மூலம் எங்களைப் போன்றவர்களை சமுதாயத் திற்குத் தெரியப்படுத்தி எல்லோரும் சிறந்து உருவாக வேண்டும் என்ற எண்ணத்தை அவர்களைப் போன்றவர் களுக்கு ஏற்படுத்த முயற்சிப் பதற்கு எனது நன்றிகள்.

**அந்தவகையில் நீங்கள் என்னமாதிரியாக ஈடுபாடு கொண்டுள்ளீர்கள், அல்லது ஈடுபடலாம் என நினைக்கிறீர்கள?**

எனக்கு இதுவரை இவ்வாறாக சிந்திப்பதற்கான எண்ணம் மனதில் இதுவரை எழவில்லை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இப்போது நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டதன் மூலம் எனது சிந்தனையைத் தூண்டியுள்ளீர்கள். இனி நிச்சயம் என்னால் முடிந்த வரை இதற்காகவும் வேண்டிய பணிகளைச் செய்துகொள் வேன்.

**வேறு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

எனக்கு இவ்வாறான சந்தர்ப்பத்தை வழங்கிய பிரகாசம் பத்திரிகைக்கு நன்றி தெரிவிப்பதுடன் மேலும் இப்பத்திரிகை சிறப்புற எனது வாழ்த்துக்கள்.



# சரவெடி சம்பாஷணை

சுமதி குகதாசன்

### தேர்தல்

**பரமேஸ்:-** அண்ணை! இந்த தேர்தல்கள் வந்து வந்து போகுது. அதைப் பற்றி என்ன சொல்லுறி யள்?

**மகாலிங்கம்:-** அதை என்னத்தை சொல்லுறது. ஒரு காலத்திலை இதுக்கு கொஞ்சம் எண்டாலும் ஒரு கணக்கு இருந்திச்சு. இப்ப இது பெரும்பாலும் வேடிக்கை தான். எண்டாலும் எல்லாத்திலையும் நன்மையும் இருக்கு, தீமையும் இருக்கு. சனத்தின்ரை கைநாடி பார்க்கவும், தங்கடை தங்கடை பலத்தைக் காட்டவும் ஒவ்வொருத் தருக்கு சமயத்தில இதுவும் உதவுது தான். இடது சாரிகளும் ஐம்பது அறுபது, எழுபதுகளிலை பல பிரிவாய் தேர்தல்களை கண்டவை தானே. இந்த விகிதாசார முறையெண்ட ஒன்டு ஐம்பது, அறுபதுகளிலை இருந்திருந்தால் பொதுவுடமைக் கட்சியிலிருந்து இன்னும் நல்ல மனிசர் கொஞ்சப்பேர் தெரிவு செய்யப்பட்டிருப்பினம். அவை தங்களாலை ஆனதைப் பாடுபட்டு ஏழைப்பட்ட சனத்துக்கு செய்திருப் பினம். "எல்லாம் நாங் கள் முன்னம் செய்து வைத்ததுகள் தான் கைக்குக் கையோடை இப்ப கிடைக்கவேணும் எண்டிருந்திருக்கு" எண்டு அண்ட டைக்கு என்னோட கதைச்ச ஒரு ஆள் சொல்லிச்சு. அதுக்குப் பிறகு எழுபதுகளிலை அதிலை ஒரு சாரார் கூட்டணி போட்டுக் குப்புற விழுந்த கதைதான் உலகம் தெரிஞ்ச கதையாச்சே. அதைவிடு.

**பரமேஸ்:-**இப்ப உள்ள நிலைமை கள் என்னமாதிரி இருக்கண்ணை?

**மகாலிங்கம்:-**இப்ப என்ன? வேதாளம் திரும்பவும் முருங்கை மரத்தில ஏறின கதைதான். அப்புக்காத்துமாரும் நீதவான்களும் திரும்ப "அ"விலிருந்து தொடங்குகினம்.

**பரமேஸ்:-** இதுக்கண்ணை, வடிவேலுவின்ரை ஸ்ரைலிலை

"தொடங்கும், தொடங்கும், தொடங்கித்தான் பாரும்" எண்டு சொல்லிப் போட்டு எங்கடை சோலியைப் போய் நாங்கள் பார்க்கவேண்டியது தான். என்னண்ணை?

**மகாலிங்கம்:-** நீ இப்ப எனக்கு மேலாலை விண்ணனாய் விட்டாய். பாரதியார் என்ன நினைச்சுக் கொண்டு "அக்கினிக்குஞ்சு" எண்ட கவிதையைப் பாடியிருப்பார் எண்டு எனக்கு இப்ப விளங்குது.

### எதனை வேண்டுவோம்?

**பரமேஸ்:-**எங்களுக்குகன பிரச்சினைகள், தேவைகள் கிடக்கண்ணை. பொருளாதாரம், அடக்குமுறைகள், உரிமைகளின்மை, இன்னும் அபிலாஷைகள் மறுக்கப்படல் என எல்லாமே பிரச்சனைகளாய்க் கிடக்கண்ணை. இதுக்குள்ளை எதை முதலிலை வேண்டி நிற்கிறது எண்டதே பெரும் குழப்பம் தானேயண்ணை எங்களைப் போல சனத்துக்கும்.

**மகாலிங்கம்:-** எடேய், சனம் குழம்பேல்லையடா தம்பி. குழப்பப்படுகிது.

**பரமேஸ்:-**ஏனண்ணை அப்பிடிச் சொல்லுறியள்? யார் அண்ணை குழப்புறது?

**மகாலிங்கம்:-** தன்ரை குடும்பத்தின்ரை அடுத்த வேளை வயித் துப் பசியை தீர்க்க பாடுபட்டுக் கொண்டிருக்கிறவையிட்டடைப் போய் நீ இப்படி கதைச்சுப் பார் பாப்பம். தம்பிக்கென்ன, நாங்கள் சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கேக்கை உதுகளைப் பற்றி யோசிக்க எங்கை நேரம் எண்டு தான் கேப்பினம். பசி வந்தால் பத்தும் பறந்துபோம் எண்டு சும்மாவே சொன்னவை. இப்ப விளங்குதோ, எது முதல் பிரச்சினையெண்டு.

**பரமேஸ்:-** அப்ப இந்தப் பிரச்சினையை முதன்மைப்படுத்தி தீர்வு காணாமல் ஏனண்ணை மற்றதுகளைப்பற்றி மாத்திரம் எல்லோரும் பிரச்சாரம் செய்யி னம்?

**மகாலிங்கம்:-** எடேய் தம்பி, இந்தப் பிரச்சினை இல்லாதவை, இதைவிட்டுப்போட்டு தங்கடை சொகுசுக்காக வேண்டின போராட்டமாய் ஏனைய பிரச்சினைகளை கையிலை எடுத்துக் கொண்டிருக்கினம். எண்டபடி யாலை, தொடர்ந்து உதுக்கான பிரச்சாரங்

களையும் பலவிதமாய் செய்து கொண்டு வருகினம். இதாலை பெரும்பாலான மக்களுக்கு எந்தவித நன்மையு மில்லை எண்டதை ஒவ்வொரு வரும் விளங்கிக் கொள்ள வேணும். முந்தி ஒருகாலம் தங்கடை இனத்தையே அடக்கி ஆண்டவை, அதோட முடிஞ்சால் மற்ற இனங்களையும் அடக்கி ஆழ முற்பட்டவை, இன்று தாங்கள் வேறொரு இனத்தைச் சேர்ந்த அடக்குமுறையாளர்களால் அடக்கி யாளப்படுவதை பொறுக்க மாட்டாமல் இப்படிச் செயல்படுகினம். தங்கடை குறுகிய நோக்கிலான அரசியலாக எங்கடை அரசியலை மாத்தி வைச்சுக்கொண்டு இனத்துவமான பிரிவினைவாதக் கருத்துக்களை திரும்ப திரும்ப சனத்துக்கு சொல்லிக்கொண்டு சனத்தை குழப்பி வைச்சிருக் கினம். மற்றப்படிக்கு இங்கையிருக்கிற சனம், திண்டா லென்ன, குடிச்சாலென்ன, இருந்தா லென்ன, செத்தாலென்ன எண்ட போக்குத் தான் இவைக்கே தவிர உள்ளூர விசுவாசமாக ஒரு நன்மை யையும் நினைக்கேல்லை. இந்தக் குழப்பங்காச்சிக் கூட்ட அரசியல் வாதிகள் சரி, அவையின்ரை வழி நடத்திகள் சரி, வால்பிடிகள் சரி இவ்வளவுக்கும் தாங்கள் வெளி நாட்டு வாழ்வுரிமையை குடும்பம் குடும்பமாய் வைச்சுக் கொண்டு இங்கையிருக் கிறவையை பலி கடாவாக்குகினம். ஆனால் இவை மட்டுமென்ன? வெளிநாடுகளில் பல விதங்களில் உரிமை மறுக் கப்பட்டவர்களாக தாங்களும் வாழ்ந்து கொண்டுதானிருக் கின்றார்கள் என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை.

ஆடம்பரம் என்று பணத்தை இறைத்து போலி கௌரவத்தை பெற நினைக்கிற அறியாமையிலும், தங்கடை சொகுசு வாழ்க்கை குறையாமலும், இங்கையிருக்கிற ஏழைச் சொந்த பந்தங்களுக்கு உதவாமலும், இதைவிட முழு உலகத்தையும் ஒன்றுக்கு முப்பது தடவை சுற்றிவாறதை பொழுது போக்காகக் கொண்டும் வாழுகினம். இவைக்குப் பிரதிநிதிகள் எண்டு சில அப்புக்காத்துமாரும், நீதவான்களும் இன்னும் சில வேலை வில்லட்டி யில்லாதவையும்.

நீ ஏன் கனக்க சொல்லு றாய்? நான் அண்டைக்கு முதல் தரம் லண்டன் போட்டு வந்த ஒரு ஆளைச் சந்திச்சனான். அவர் தான் போய் இறங்கின உடனை ரோட்டாலை

வாகனத்திலை போகேக்கை தனக்கு முதல்லை அதிர்ச்சியளித்த விஷயம் என் நண்டாலாம், "என்னடா, வீடுகள் எல்லாம் யுனிபோ.்.ர்ம் போட்ட மாதிரிக்கிடக்கு எண்டு? பிறகு தான் தெரிஞ்சுதாம் அரசாங்கத் தின்ரை அனுமதிப்படி எல்லா வீடுகளும் ஒரே அமைப்பாகத்தான் கட்டவேண்டும். அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் ஒரு கல்லைக்கூட சொந்த வீடெண்டாலும் கழட்ட ஏலாதாம் எண்டு. அப்படிப் பார்த்தால் சமத்துவக் கொள்கையின்ரை ஒரு பகுதியை அவையும் ஏற்றுத்தான் நடக்கினம் பார்த்தியோ. ஆனால் எங்கடை ஆக்களுக்குத்தான் சமத்துவம் எண்டது கொஞ்சம் நரி வெருட்டுற மாதிரிக்கிடக்கு. இதுக்குள்ளை, இங்கை எங்களுக்கு இருக்கிற சில உரிமைகளையும் இல்லாமல் செய்யிற கைங்கரி யத்தைத் தான் தங்களாலை முடிந்தவரை இவை செய்து கொண்டிருக்கினம்.

**பரமேஸ்:-**அண்ணை! உங்களோட கதைச்சுக் கதைச்சுத்தான் எனக்கும் பலவிதமான விஷயங்களும், சிந்தனைகளும் விளங்க வருகுது. இல்லையெண்டல் குதிரைக்கு கடிவாளம் போட்டது மாதிரித்தான் நானும் இருந்திருப்பன்.

### கல்வி

**பரமேஸ்:** அண்ணை பொதுவுடை மைக்காரர் தாய்மொழிக் கல்வி, இலவசக் கல்வி எண்டெல்லாம் அறிமுகப்படுத்திச்சினம். இப்ப எல்லாமே தலைகீழாய் மாறிப்போய் கிடக்கு. கல்வி எண்டிறது இப்ப ஒரு வியாபாரப் பண்டமாய் கிடக்கு. கல்விக்கூடங்கள் சந்தை யாயும் ஆசிரியர்மார் தரகர்மாராயும் இருக் கினம். சனம் இவ்வள வுக்குள்ளா லையும் முண்டியடிச்சுக் கொண்டு நிக்குது. அதைப் பற்றி என்ன நினைக்கிறியள் அண்ணை?

**மகாலிங்கம்:-** பொதுவுடைமைச் சமுதாயம் இல்லாதபட்சத்திலை கல்வியின் நிலை இப்படித்தான் இருக்கும். இதிலை சனத்தைக் குறை சொல்ல முடியாது. படிச்சு உத்தியோகம் பெறுகிறது மட்டும் தான் எதிர்காலத்திலை நிரந்தர மான கஞ்சிக்கு வழியெண்டு நினைக்குது கள். இந்த சுரண்டல் போக்கான உலகத்திலை அதுகளும் என்னத தைத்தான் நினைக்கிறது. அதாலை தான் தனியார் கல்விக் கலாசாரமும் அந்நிய மொழிக் கலாசாரமும் இந்தமாதிரித் தலைவிரித்தாடுற துக்கு இடமாய்ப் போச்சு. எந்த தொழில் எண்டாலும் சரி, செய்

யிறவையும் அதுகளின்ரை குடும்பமும் நல்லா வாழுறதுக் கேற்ற வருமானம் கிடைக்கும் எண்டால் சனம் ஏன் உயர்கல் விக்கு போட்டி போட்டு தங்கடை மனிசத்தன்மை யையும் இழந்து போகுது?

**பரமேஸ்:-** அப்ப என்னண்ணை? உயர்கல்வி வேண்டாம் எண்டு றீயளா?

**மகாலிங்கம்:-** என்ன இப்படிக் கேக்கிறாய்? அப்படி சொல்ல நான் மடையனே. அவனவன் கெட்டித் தனத்துக்கேற்ற படிப்பை அவனவன் தெரிவுசெய்து கொள்ளுவான் தானே. கல்வி எண்டிறது, வரையறை இல்லாத ஒன்று. எல்லாருக்கும் அடிப்படை கல்வி அவசியம் தான். கல்வி தான் ஒரு மனிதனின் அறிவை வளப்படுத்தி அவனது ஆளுமையை வளர்க்கிறது. கல்வியின் பயனையும் நாங்கள் ஒரு எல்லைக்குள்ளை நிறுத்த முடியாது. எண்டபடியாலை கல்வி பெறுவது என்பது எல்லோர தும் மறுக்கப்படமுடியாத அடிப்படை உரிமை. ஆனால் இப்ப என்னடா வெண்டால், பரீட்சையை மையமாகக் கொண்டு குறுகிய நோக்கிலை கல்வி பார்க்கப்படுற தாலை, தங்கடை பெத்த தவ்வல் பிள்ளை களைப் போட்டல்லே தாய் தேப்பன் முறிச்சு எடுக்கத் துவங்குதுகள். இதாலை அந்தப் பிள்ளைகளின்ரை மனமும் உடம்பும் எவ்வளவோ ஆரோக்கி யம் குறைஞ்சு போகுதாம். போதாக் குறைக்கு பெரியவைக் குள்ள மட்டும் என்ன, ஒவ்வொருத் தருக்குள்ளையும் போட்டி, பொறாமை, பொய், ஏமாற்று எண்டு தேவையில்லாத குணங்களும் உருவாகி அதுகளை தங்கட பிள்ளைகளுக்கும் பழக்கி இப்ப மனிதத்துவத்தையே ஒட்டு மொத்தத்திலை கேள்விக் குறியாக் குது.

**பரமேஸ்:-**அதைவிட காலாவதி யாக்குது எண்டது தான் இன்னும் மேலான சொல்லாய் இருக்கும் எண்டு நான் நினைக்கிறன்.

**மகாலிங்கம்:-** ஓம்! ஓம்! நீ விண்ணன் எண்டு நான் எப்பவோ ஒப்புக் கொண்டுட்டன்.

## விழிப்பு

**மகாலிங்கம்:-** சரி கொஞ்சம் வீட்டு நய நட்டங்களையும் கதைக்காமல் எப்படி? எப்படி உன்ரை பாடுகள் போகுது?

**பரமேஸ்:-**அதையேன் கேக்கிறி யள். உங்களுக்குத் தெரியாதே? பெஞ்

சாதி பிள்ளையெண்டு நாங்கள் ஐஞ்சு சீவன்களல்லே சீவிக்க வேணும். என்னத்தச் சமாளிச்சும் பத்தாது. வாழ்க்கையே வெறுத்துப் போகும். காலம் போகப்போக பிள்ளை குட்களின்ரை முகத்தைப் பார்க்கவே கூச்சமாய் இருக்கு. அந்தக் காலத்திலை என்னண்டணை ஏழெட்டுப் பிள்ளைகளைப் பெற்றுப் போட்டுச் சமாளிச்சவை.

**மகாலிங்கம்:-**நல்ல கேள்வி கேட்டாய். உதுக்கு நான் விளக்க மாய்த் தான் பதில் சொல்ல இருக்கு. நான் ஒரு பெட்டையை பெத்து வைச்சுக் கொண்டு படுகிறபாட்டை ஏன் கேக்கிறாய். என்னை ஏன் பெத்தனீங் கள் எண்டு இடைக்கிடை பகிடியும் வெற்றியுமாய் என்னட்டை கேக்கி றாள். அதுக்குத் தான் நானும் சொல்லுவன், தெரியாத்தனமாய் பெத்துப் போட்டம். எங்களைவிட அறிவு கூடின நீ எண்டாலும் பெறாமல் இரு எண்டு. வேறை என்னத்தை நான் சொல்ல? அந்தக் காலத்திலை உலகம் இந்தக் கெதியிலை போகுமெண்டு அதிக மாய் ஒருத்தரும் யோசிக்கேல்லை. அதோடை நல்லதொரு சமூக அமைப்பு கட்டியெழுப்பப்படும் என்ற நம்பிக்கையும் ஓரளவு எல்லார் மனங்களுக்குள்ளும் இருந்தது. இப்ப அந்த மாதிரி ஒன்றையும் காண முடியேல்லை. இந்த நிலைமை எங்களைப்போல ஆக்களைவிட மேல்தட்டுக் காரருக்குத்தான் நல்லாய் விளங்குமாய் போல தெரியுது. அதாலை தான் அவை கோடி கோடியாய் செல்வங்களைக் குவிச்சு வைச்சிருந்தாலும் பிள் ளைகள் கனக்க எண்டால் பிரிச்சுக் குடுக்கப் பத்தாது எண்டு, பிள்ளை களை ஒண்டோடையும் இரண் டோடையும் நிப்பாட்டுகினம்.

**பரமேஸ்:-** அப்ப என்ன சொல்ல வாறியள், ஏழை பாழைகள் கலி யாணம் காட்சி காணப்படாதோ. என்னைக் கோபப்படுத்தாமல் இதுக்கு மறுமொழியைச் சொல் லுங்கோ பாப்பம் அண்ணை.

**மகாலிங்கம்:-** என்ன பரமேஸ் இதுக்குப்போய் கோவிக்கிறாய் சின்னப்பிள்ளை மாதிரி? தம்பி கலியாண பந்தமும் அதாலை வாற உறவுகளும் எங்கடை திடமான, காத்திரமான, துணிவுடனான செயல் பாடுகளை எல்லாம் தடுக்கப் பார்க குது. இந்த பந்த பாசங்களுக்காகவே பல தியாகங்களைப் புரிஞ்சு கொண் டும், கஷ்டங்களை சகிச்சுக் கொண்டும் குண்டுச் சட்டிக்குள்ளை

குதிரை யோட்டிப் போட்டுக் கடைசியிலை சாகவேண்டியது தான். இதைத் தான் தொடர்ந்து தொடர்ந்து சந்ததி சந்ததியாய் செய்து கொண்டு வாறம். இதாலை நாங்களோ எங்கடை பிள்ளைகளோ சந்ததியோ இதுவரை முன்னேறவில்லை. எண்டபடியாலை இதைப்பற்றிக் கொஞ்சம் நிதானமாக யோசிச்சுப் பார்க்க வேணும் எண்டுதான் சொல்லவாறன் கலியாணமாகு மட்டும் விளங்காத கஷ்டங்களும் சிக்கல்களும் கட்டின அன்றுதான் விளங்கத் துவங்கும். குடும்பஸ்தன் உனக்கு இதுகள் நான் சொல்லத் தேவையில்லை. இதை ஒவ்வொருத் தரும் குடும்பஸ்தர் ஆகும் முன்னரே தெரிஞ்சு கொண்டிருந்தால் அது அவை யின்ரை சந்ததிக்கே நன்மை பயக்கும். கலியாணத்தை தெரிவு செய்யுறதிலயும் நடத்திறதிலையும் எல்லாருக்கும் ஒரு தெளிவும் பலனும் கிடைக்கும் எண்டுதான் நான் சொல்ல வாறன். என்ரை மகளுக்குச் சொல்லிப் போட்டன். உனக்கு சீதன பாதனம் தர என்னட்டை ஒண்டு மில்லை. நீயும் மற்றவைபோல ஆடம்பரக் கலியாணம் கட்டி வைப்பன் எண்டு கனவு காணாதை. நீ பட்ட கஷ்டத்தை உன்ரை பிள்ளைக்குக் குடுக்க நீ தயாரா, இல்லையா எண்டது உனது தனிப் பட்ட விஷயம். என்னை இதுக்கை ஒண்டுக்கும் இழாதை எண்டு சொல்லிப் போட்டன். மற்றப்படிக்கு ஒரு பொம்பிளைப் பிள்ளை கலி யாணம் இல்லாமல் வாழமுடியாது என்ற காலமெல்லாம் இப்ப மலையேறிப் போச்சு. அவ்வளவு தான் எனக்குத் தெரியும் எண்டு நான் சொல்லிப்போட்டன்.

**பரமேஸ்**:-இதுக்கு உங்கட மேள் என்ன சொல்லுறா?

**மகாலிங்கம்:**-புலிக்குப் பிறந்தது பூனையாகுமோ தம்பி? அவள் வலு வீரி. எல்லாம் விளங்கி வைச்சிருக் கிறாள். தாயோடை பட்டும்படாமலும் ஏதாவது கதைப்பாள். எனக்கு அவளைப் பற்றி தெரியும்.

**பரமேஸ்**:-நீங்கள் சொல்லுறது இப்ப விளங்குது அண்ணை. ஆரம்பத்தில் நீங்கள் கலியாணத் துக்கு எதிரியோ எண்டு தான் நான் நினைச்சன். முதலலை தனியா ளாய் வாழ்க்கையை ஸ்திரப் படுத்திப் போட்டு பிள்ளை களின்றை நன்மை களை முதன் மையாய்க் கொண்டு எதையாச்சும் செய்யுங்கோ எண்டு சொல்ல வாறி யள் என்னண்ணை? அதோடை இதுகளுக்கு தோதுப்ப டேல்லை எண்டால் நைசா நழுவுங்கோ எண்டு நாசூக்காய் சொல்லுமாப் போலையும் கிடக்கு. அப்படியோ அண்ணை?

**மகாலிங்கம்:**-இதைமட்டும் சத்தம் போட்டுக் கதையாதை. அங்காலை

யாரும் வயதானவை கேட்டுக் கொண்டு நிண்டுபோட்டு கையில கிடக்கிறதை தூக்கிக் கொண்டு வரப்போகினம். நைசா நழுவுறது இல்லையடா தம்பி வாழ்க்கைச் சிக்கல்களை நேர்மையும் நுட்பமுமாய் கையாளவேணும். ஆனால் உந்த கலியாண விசயத்திலை ஒரு சங்கதியும் இருக்கு. என்னன்டால் உன்னைப் போல என்னைப்போல இல்லாமல் கலியாணத்தை ஆதாய நோக்கத் திலை பார்த்துச் செய்யிற ஒரு சாராரும் இருக்கினம். அவையின்ரை லைன் எங்களுக்குச் சரிவராத லைன். அதோட ஏன் நாங்கள் போவான்? இந்த விஷயத்தை இதோட விடுவம்.


### மானம்

**பரமேஸ்:-** இப்ப இனி குடித்தனம் எண்டு ஆகியாச்சு. இனி எங்கடை வாழ்க்கைப் பாட்டைப் பாத்தாக வேணும். பாண் அறுபது ரூபாய். அரிசி தொண்ணூறு. தேங்காய் ஐம்பத்தி அஞ்சு. இப்படி சொல்லி முடிக்க ஒருநாள் போதாது. இந்தப் போக்கிலை போனால், எங்கடை பெடி பெட்டையளும் இனிவரும் காலத்திலை என்ன செய்யப்போகுது களோ எண்டுதான் பெரிய வருத்த மாயும், யோசனையாயும் இருக்கு. இப்ப இளசுகள் கனக்க கடை களிலையும் தொழிலகங்களிலயும் வேலை செய்யுது கள். அநேகமாய் பன்னிரண்டு மணிநேரம் நிண்ட நிலையிலை வேலை. நிரந்தர வேலையும் இல்லை. அடிப்படை சம்பளமோ வலு குறைவு. இதுகளின்ரை சம்பளம் ஒருவேளை சாப்பாட்டுக் குத்தான் ஒழுங்காய் காணும். அதோடை போக்குவரத்து, இருப்பிடம், துணிமணி, வருத்தம் துன்பம் எண்டு இன்னும் எத்தனை இருக்கு. இதுகளை யாருட்டச் சொல்லுறது? எங்களுக்காக யார் இருக்கினம்? முந்தி எண்டால் எங்கடை தாத்தாண்டை காலத் துலை தொழிற்சங்கங்கள், போராட்டங்கள் எண்டு பெரிய பலத்தோடை இருந்து வெற்றி கண்டிச்சினம். எனக்குத் தெரியும், முந்தி தாத்தாட்டை ஒரு சிவப்புக் கொடி ஒண்டு வச்சிருந்து காட்டினவர். இப்ப எங்களுக்கு அப்பிடி யாரண்ணை இருக்கினம்?

**மகாலிங்கம்:-** தம்பி உன்ரை மன வேதனை எனக்கு விளங்குது. உதே மன வேதனை எனக்கும் இல்லாமல் இல்லை. தங்கடை சுயநலத்துக்காக, எங்கடை சில தலைமகள் தான் இனத்து வேஷத்தையும் பிரிவினை வாத்தையும் வளத்து அதை இளஞ் சந்ததியிட்டையும். ஊட்டி விட்டிட்டுது. இந்த பொதுவுடமை கட்சிக்காரரும் தங்களுக்குள்ளை பிளவு, உடைவு, வால்பிடிப்பு எண்டு மினக்கிட இவை இதை வடிவாய் பயன்படுத்திப் போட்டினம். இதைத் தான் அந்த ஆள் சொன்னது எண்டு சொன்னனான். முன்ன செய்தது களின்ரை பலன் ஒவ்வொரு வடிவிலை வந்திருக்கு எண்டு இனியாவது நல்லாய் நடக்கப் பாப்பம்.

# சுதந்திர இலங்கையின் அமைச்சரவைகளில் தமிழ் அமைச்சர்கள்

## தமிழர்களே அங்கம் வகிக்காத அமைச்சரவைகள் இருந்திருக்கின்றன



நூற்றுக்கு மேற்பட்ட அமைச்சர்களைக் கொண்டுள்ள இன்றைய அரசாங்கத்தில் விரல்விட் டெண்ணக் கூடிய சிறுபான்மை இனத்தவர்களே அமைச்சர்களாக உள்ளனர். 1948 ஆம் ஆண்டு சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கத்தை டி.எஸ்.சேனநாயக்கா அமைத் தார். பிரதமர் டி.எஸ்.சேனநாயக் காவின் அரசில், மூன்று இலங் கைத் தமிழர்கள் அமைச்சர் களாகப் பணியாற்றினர். சி.சிற்றம்பலம் தபால் மற்றும் தொலைத் தொடர்புகள் அமைச் சராகப் பணியாற்றினார். சீ.சுந்தரலிங்கம் வர்த்தக அமைச் சராகவும் ஜி.ஜி. பொன்னம்பலம் மீன்பிடி மற்றும் தொழில்துறை அமைச் சராகவும் நியமிக்கப்பட்டிருந் தனர்.

1952 ஆம் ஆண்டு டி.எஸ். சேனநாயக்கா காலமாகியதை அடுத்து அவரது புதல்வர் டட்லி சேனநாயக்கா பிரதமராகப் பதவி யேற்றுக்கொண்டார். அவரது அரசாங்கத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வி.நல்லையாவும் வடபகுதியைச் சேர்ந்த ஜி.ஜி. பொன்னம்பலமும் அமைச்சர்களாகப் பணியாற்றினர். பின்னர் 1953 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ஆம் திகதி சேர்.ஜோன் கொத்தலாவல பிரதமர் பதவி வகித்தார். 1956 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை அவர் பதவி வகித்தார். அவரது அரசாங்கத்தில் செனட்டர் கந்தையா வைத்திய நாதனும் எஸ்.நடேசனும் அமைச்சர் களாகப் பதவி வகித்தனர்.

1956ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா பிரதமராகப் பதவியேற்றார். இவர் 1959 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி படு கொலை செய்யப்பட்டார். 1959ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 1960 மார்ச் மாதம் வரை டபிள்யூ.தகநாயக்கா பிரதமராகப் பதவியேற்றார். டட்லி சேனநாயக்கா மீண்டும் 1960 மார்ச்சில் பிரதமரானார். இவர் 1960 ஜுலை வரை பதவி வகித்தார். பின்னர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா 1960 ஜுலை 23 முதல் 1965 மார்ச் 26ஆம் திகதி வரை பிரதமராகப் பதவி வகித்தார். இவர்களுடைய பதவிக் காலத்தில் எந்தவொரு தமிழருக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை.

1965 மார்ச் 27ஆம் திகதி முதல் 1970 மே முப்பதாம் திகதி வரை தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் ஐ.தே.க.வின் தேசிய அரசு ஆட்சி புரிந்தது. இந்தக் காலகட்டத்தில் எம். திருச்செல்வம் கியூ.சி. அவர்கள் செனட்டர் ஆக்கப்பட்டு உள்;ராட்சி அமைச்சராக நியமிக கப்பட்டார். இவர் தனது அமைச்சுப் பதவியை 1968 செப்டம்பர் மாதம் பதினாறாம் திகதி இராஜினாமா செய்தார். ஆதன் பின்னர் 1970 வரை எந்தவொரு தமிழரும் அமைச் சராக நியமிக்கப்படவில்லை. தேசிய அரசாங்கத்தில் பதினாறு அமைச்சர கள் இருந்தனர். இவர்களில் எம்.திருச்செல்வம் மட்டுமே தமிழரா வார். இவர் காலஞ்சென்ற நீலன் திருச்செல் வத்தின் தந்தையாராவார்.

1970 மே மாதம் முப்பதாம் திகதி திருமதி.சிறிமா பண்டாரநாயக்கா மீண்டும் பிரதமரானார். 1977 ஜுலை மாதம் 22ஆம் திகதி வரை இவர் பதவி வகித்தார். இவரது அமைச் சரவையில் இருபது அமைச்சர்கள் அங்கம் வகித்தனர். அவர்களில் செல்லையா குமாரசூரியர் மட்டுமே தமிழராவார். 1977 ஜுலை 23 ஆம் திகதி திரு.ஜே. ஆர்.ஜெயவர்த்தனா பிரதமரானார். திரு.கே.டபிள்யூ.


தேவநாயகம் நீதியமைச்சராக நியமிக்கப்பட்டார். 1978 பெப்ர வரி நான்காம் திகதி திரு. ஜே.ஆர். ஜயவர்த்தன முதலாவது செயலாற்று அதிகார மிகு ஜனாதி பதியால் பதவி யேற்றுக் கொண்டார். அதன் பின்னரும் திரு.தேவநாயகம் அமைச்சர் பதவி வகித்தார்.

1980 ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஜே.ஆரின் அமைச்சரவையில் இலங்கைத் தமிழர்களான கே.டபிள்யூ. தேவநாயகம், சீ.இராஜதுரை ஆகியோர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்ட னர். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச 1989 ஆம் ஆண்டு பெப்ரவரியில் பதவியேற்றுக் கொண்டார். எந்தவொரு இலங்கைத் தமிழரும் இவரது அமைச்சரவையில் அங்கம் வகிக்கவில்லை. 1994 ஆகஸ்டில் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா பதவியேற்றுக் கொண்டார். இவரது அமைச்சரவையல் லக்ஷ்மன் கதிர்காமர் வெளிவிவகார அமைச் சராக நியமிக்கப்பட்டார்.


1994 ஆம் ஆண்டு நவம்பரில் சந்திரிகா குமாரதுங்கா செய லாற்று அதிகார மிகு ஜனாதி பதியாகப் பதவியேற்றுக் கொண்டார். இவரது அமைச் சரவையில் லக்ஷ்மன் கதிர்காமர் தொடர்ந்தும் வெளிவிவ கார அமைச்சராக பதவி வகித்தார். இந்திய வம்சாவளித் தமிழரின் வாக்குரிமை 1952 ல் பறிக்கப் பட்டது. அன்று வரை சுதந்திர இலங்கையில் இந்தியவம் சாவளித் தமிழரான சௌமிய மூர்த்தி தொண்டமான் அமைச் சரவையில் அங்கம் வகித்தார். 1978 ஆம் ஆண்டு செப்டரம்பரில் திரு.சௌமியமூர்த்தி தொண்ட மான் மீண்டும் அமைச்சராக நியமிக்கப்பட்டார். இதன் பின்னர் இன்றுவரை மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங் களில் இந்திய வம்சாவளித் தமிழருக்கு அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் கிடைத்துள் ளமை குறிப்பிடதக்கது

# RST ENTERPRISES (PVT) LTD

NO. 114, W.A. SILVA MAWATHA
WELLAWATTE, COLOMBO 06.
Tel: 011 2501715, 011 2367350, 011 4376711-2
Mobile: 0777 878772
E-mail: rst_enterprises@yahoo.com



- Offset Printing
- Duplo Printing
- Digital Printing
- Photocopy
- Book Printing
- Perfect Binding
- Spiral Binding
- Machine Gathering
- Receipt Books
- Visiting Cards
- Foiling
- Translation (3 Languages)
- Typesetting (3 Languages)



*With best Compliments from :*

வெள்ளவத்தையில்.......

# கோகிலம் புத்தக நிலையம்

# Kokilam Book Center

**No. 4C/5, Fussels Lane.**
**Wellawatta.**
**Tel: 077-6030393**

- Exercise Books
- All Stationery Items
- Indian Magazines
- Past Paper Books
- Photo Copy
- School Instruments
- Laminating
- Book binding

**பிரகாசம் சஞ்சிகையை தனியாகவோ மொத்தமாகவோ எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.**

Business Time :
Daily - 8.30 A.M. to 8.30 P.M.

# APARTMENT FOR RENT

## IN WELLAWATTE.

- ✦ Fully Furnished
- ✦ 3 Rooms
- ✦ 2 Bathrooms
- ✦ AC In 1 Room
- ✦ Parking Facility

**Rent Per Day**
**Rs. 5000/-**
**With AC -Rs. 5500/=**

**Contact Nos.: 0770408231**
**0785131375**



www.jeyechandrans.com
JEYECHANDRANS
The Art of Fashion
முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு ராசியான ஒரே இடம்
433,காலி வீதி, வெள்ளவத்தை
011-4528435,011-4528438
SKYPE : jeyechandrans888
இல.194,மெயின் வீதி, கொழும்பு-11.
011-2448870, 011-2448860
SKYPE : jeyechandrans555